புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம்௵ ஸெப்டம்பர்௴ 30உ [ந. 217

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

(யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம் என்ற கட்டுரை இந்த வாரத்தில் கிடையாது.)

பிரஸங்கம் CCXVII.

ஐரோப்பாவில் நேசதேச வெற்றிகள்.

டெகரான் சந்திப்பின் விளைவுகள்.

(லெப்டினென்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்.)

பிரான்ஸில் பிரிடிஷ், கனேடிய, அமெரிக்கப் படைகளின் அபாரமான வேகமுள்ள முன்னேற்றத்தைப்பற்றி அவ்வப்பொழுது வெளியிடும் தகவல்கள் வெகு சீக்கிரத்தில் பழங் கதையாகிவிடுகின்றன.

ஆகையால் வெற்றிகளை விமர்சனம் செய்வதற்கு இதுதான் தகுந்த தருணம்.

பத்துமாதங்களுக்குமுன்தான் அமெரிக்க, பிரிடிஷ் ருஷ்யத் தலைவர்கள் டெகரானில் சந்தித்து ஒரு முக்கியமான அறிக்கையை வெளியிட்டார்கள். அதன்படி வெற்றிபெற உருவான திட்டம்போட்டு அமுலுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டது.

கிழக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் ஆரம்பிக்கப்படவேண்டிய நடவடிக்கைகளின் லக்ஷியமாகவும், காலக்குறிப்பு சம்பந்தமாகவும் மூவர்களுக்குள் பரிபூர்ணமான ஒப்பந்தம் ஏற்பட்டதென்று அந்த தஸ்தவேஜியில் சொல்லப்பட்டது. அதன் முடிவில் கீழ்க்கண்ட அபிப்பிராயம் காணப்பட்டது. தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் முறையே ஜெர்மன் தரைப்படைகளையும், யூ படகுகளையும், யுத்ததளவாட உற்பத்தி சாலைகளையும் அழிக்கும் நமது முயற்சியை ஒருவரும் தடுக்கமுடியாது.

அந்த மகாநாட்டுக்குப்பின்பு அனுபவம் அற்ற யுத்ததந்திரிகள் மேற்கிலிருந்து தாக்குதலை சீக்கிரமாகத் துவக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அவர்கள் இவ்வளவு ஆதங்கப் பட்டிருக்கவேண்டியதில்லை. ஏனென்றால் டெகரானிலேயே இந்த நடவடிக்கையின் நிகழ்ச்சி காலமும் முடிவு செய்யப்பட்டது.

ஜெர்மன் சேனைகளையும், யூ படகுகளையும், தொழிற்சாலைகளையும் அழிக்கும் நடவடிக்கைகள் டெகரான் கால அட்டவணைக்கு ஒத்ததாக நடந்ததா அல்லது முன்னதாகவே நடந்ததா என்று கவனிப்போம். அதை நாம் நிச்சயமாக அறியக்கூடாவிட்டாலும் நமக்கு சில நடவடிக்கைகள் அனுபவத்தில் காணப்படுகின்றன. பிரான்ஸும், பெல்ஜியமும் விடுதலை பெற்றன. ஹாலந்துக்குள் நமது படைகள் நுழைந்தன. பால்கன் நாடுகளில் குழப்பம் உண்டாகிவிட்டது. ஜெர்மன் ஆதீனத்துக்குட்பட்ட நாடுகளில் ஹங்கேரி மட்டும் ஜெர்மனி பக்கத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது.

இந்த சம்பவங்களெல்லாம் ஜெனரல் அலெக்ஸாண்டர் மே மாதத்தில் கஸ்டாவ் அரணை பலமாகத் தாக்கியபின் நேர்ந்தன. மூன்று வாரங்களுக்குப்பின் ஜூன்௴ 6உ அன்று

நேசப்படைகள் நார்மண்டியில் இறங்கின. இரண்டு வாரங்களுக்குப்பின் செம்படை ருஷ்ய முன்னணிப்படைகளுக்கும், கிழக்குப் பிரஷ்யா எல்லைக்கும், விஸ்டுலா நதியின் கரைகளுக்கும் மத்தியிலுள்ள வெளிவழியாக வேகமாக முன்னேறிற்று.

இரண்டு நடவடிக்கைகளும் ஒரேகாலத்தில் நடந்ததுடன் ஒற்றுமையாகவும் நடந்தன. முதலில் பின்னால் நடவடிக்கை ஆரம்பித்த செம்படை துரிதமாக முன்னேறிற்று. மேற்கில் கேயனில் நேசப்படைகளின் முன்னேற்றம் தடைபட்டதுபோல் தோன்றிற்று. அதன்பின் கோரண்டின் பகுதி பிடிபட்டபின் அமெரிக்கப் படைகள் பிரான்ஸ் பூராவும் பரவிவிட்டன. அப்பொழுது செம்படை வார்ஸாவிலும், பால்டிக் நாடுகளிலும் முன்னேறக்கூடவில்லை. இதாலியிலுள்ள படைகள் கஸ்டாவ் அரணுக்கும், கோதிக் அரணுக்கும் மத்தியில் தயங்கி நின்றன. இப்பொழுது கோதிக் அரண் பிளக்கப்பட்டுவிட்டது.

ஒவ்வொரு முனையிலும் ஏற்பட்ட தயக்கம் அடுத்தபடியாக வரும் வெற்றிக்கு அணை கோலியது போலாகும். கேயனில் பிரிடிஷ் படையின் முன்னேற்றம் தடைபட்டதினால் தான் ஜெர்மன் பான்ஸர் படையின் மன உறுதி குலைந்தது. அமெரிக்காவின் முன்னேற்றத்திற்குச் சௌகரியம் ஏற்பட்டது. இதாலியிலும் படைகளைத் திருத்தி அமைத்துக்கொண்டபின் படைகள் போ நதிப் பள்ளத்தாக்கு வழியாக முன்னேறி அதைவிடுவிக்க சௌகரியம் ஏற்பட்டது. வடக்கில் ருஷ்யப் போர்முனையில் ஏற்பட்ட அயர்வு செம்படை ஓடர் நதியைத் தாண்டி பெர்லின் எல்லைப்புறத்துக்கு முன்னேற முற்போக்கான நடவடிக்கையாக இருக்கக் கூடும். இவை எல்லாம் என்னுடைய ஜோசியம். ஆனால் இந்த நடவடிக்கைகளெல்லாம் டெகரான் மஹாநாட்டின் முடிவுகளின் பலன்கள் என்பது நிச்சயம். ஜெர்மன் படை அமைப்புகள் பூராவையும் சிதைவுபடுத்துவதற்கு ஜெர்மனியைப் பூராவாக நாம் ஆக்கிரமிக்க வேண்டும். நாஸி குற்றவாளிகளின் கொரில்லா நடவடிக்கையை ஒழிப்பதற்கும் சிறிது கால தாமதமாகும்.

வார யுத்தச் செய்திகள்.

(A)-முக்கியமான சம்பவங்கள்.

20—9—44 (புதன்கிழமை).	பின்லாந்து அச்சுநாடுகளுடன் உறவை ரத்து செய்தது. விமானந் தாங்கிகளில் சென்ற நேசதேச விமானங்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளின் தலைநகரமான மணிலாவைத் தாக்கின. (இரண்டுநாள் தாக்குதலில் 357 ஜப்பானிய விமானங்களும், 57 கப்பல்களும் அழிவுபட்டன).
21—9—44 (வியாழக்கிழமை).	நேசதேசப் படைகள் இதாலியில் ரிமினியைப் பிடித்தன.
22—9—44 (வெள்ளிக்கிழமை).	நேசதேசப் படைகள் ஜெர்மன் பிரதேசத்திற்குள் ஸ்டோல்பெர்க்கை ஆக்கிரமித்தன.
	ருஷ்யர்கள் எஸ்தோனியாவின் தலைநகரமான டாலினைக் கைப்பற்றினார்கள்.
	ஜப்பானியர்கள் பர்மாவில் மாயூ மலைப் பிரதேசத்திலுள்ள மற்றொரு ஸ்தானத்திலிருந்து பின்வாங்கினார்கள்.
	நேசதேச பஸிபிக் கடற்படை பிலிப்பைன்ஸை மறுபடியும் தாக்கிற்று.
23—9—44 (சனிக்கிழமை).	ருஷ்யர்கள் ரீகா வளைகுடாவிலுள்ள பார்னு என்ற முக்கியமான துறைமுகத்தைப் பிடித்தார்கள்.
24—9—44 (ஞாயிற்றுக்கிழமை.)	ருஷ்யர்கள பால்டிக் கடற்தளமான பால்டிஸ்கியைப் பிடித்தார்கள்.
	பிரிடிஷ் 2-வது சேனையின் டாங்கிகள் நிஜ்மேகனுக்குக் கிழக்கில் ஜெர்மனிக்குள் நுழைந்தன.
	ஜெர்மன் படைகள் இதாலியில் கோதிக் அரண் தற்காப்புகளைக் கைவிட்டன.
25—9—44 (திங்கட்கிழமை).	யூகோஸ்லாவிய தேசாபிமானப்படைகள் பாஸ்னியாவின் முக்கிய நகரமான பானியாலுகாவை ஆக்கிரமித்தன.
26—9—44 (செவ்வாய்க்கிழமை).	ருஷ்யப் படைகள் ஹங்கேரிய எல்லைச்சரகத்தை அணுகிவிட்டன.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப் போர்முனை.—பிரிடிஷ் 2-ம் படை ஹாலந்தின் வழியாக எஸ்ஸனுக்கு வடக்கி லுள்ள ஜெர்மன் எல்லைச்சரகத்துக்கு முன்னேறுகிறது. இது பெர்லினுக்குச் செல்லும் குறுகிய மார்க்கம். ஹாலந்தில் மாஸ், ரைன் நதிகளும் வால், லெக் என்ற கிளை நதிகளும் ஓடுகின்றன. பிரதேசம் பூராவாகவும் ஓடைகளும், நதிகளும் மிகுதியாக யிருப்பதால் உதவிப் படைகள் விமானங்கள் மூலம் கொண்டுவரப்பட்டன.

செப்டம்பர் 17-ம் தேதியன்று பிரிடனின் முதல் விமானப்படை ஜெர்மன் படை வரிசைகளுக்குப்பின் ரைன் நதியின் சங்கம முகப்பிலும், வால் நதிக்கரையில் எண்டோவனி லிருந்து நிஜ்மேகன் வரைக்கும் லெக் நதிக்கரையில் ஆர்ன்ஹிமிலு மிறங்கின.

இதே சமயத்தில் 2-வது சேனை எஸ்காட் கால்வாயிலிருந்து எண்டோவனுக்கும், நிஜ மேகனுக்கும் முன்னேறி மாஸ் நதியைத்தாண்டி ஆர்ன்ஹிமிலுள்ள படைகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முயன்றது.

இந்தப் பிராந்தியத்தில் பிரிடிஷ் படைகள் எண்டோவன், நிஜ்மேகன், சிட்டார்ட் முதலியவற்றைப் பிடித்து முன்னேறும் ஸ்தானங்களை விரிவுபடுத்திவிட்டன.

விமான மூலம் இறங்கிய படைகளைத் துண்டிக்க ஆர்ன்ஹிமிலுள்ள படைகளை ஜெர்மனி பலமாகத் தாக்கிவருகிறது. 2-ம் படைக்குவரும் ஸப்ளை மார்க்கங்களையும் துணிக்க ஜெர்மனி முயற்சிசெய்துவருகிறது.

ஆர்ன்ஹிமிலுள்ள படைகளை நிஜ்மேகனுக்கு வாபஸ் செய்தாகிவிட்டதென்று கடைசியாக வந்த தகவல்கள் அறிவிக்கின்றன.

ஸீக்பிரட் அரண் இடைவிடாது தாக்கப்படுகிறது. ஆகன், டிரியர் பகுதியில் சென்ற வாரத்தில் அமெரிக்க 1-வது சேனை ஸ்டோல்பர்க்கைப் பிடித்தபின் டெர்னு, சேனுன், செர்பவில்லார், வால்பர்க் முதலிய இடங்களைக் கைப்பற்றிவிட்டது.

மோஸல் நதிப்பகுதியில் அமெரிக்க மூன்றுவது சேனை சென்ற வாரத்தில் நான்ஸியைப் பிடித்தது. லேயரும், எபினலும் விழுந்துவிட்டன. டியூஸி பிராந்தியத்தில் கடும்போர் நடைபெறுகிறது. சேனைகள் மியூர் நதியிலுள்ள லூனவில்லியை அடைந்துவிட்டன.

ஸீக்பிரட் அரணின் தெற்குக்கோடியில் பெல்போர்ட் பகுதியில் அமெரிக்க 7-வது சேனை வோஸ்ஜெஸ் மலையை எபினலுக்குச் சமீபத்திலும் மெட்ஸையும் தாக்கிவருகிறது. கடற்கரையில் பொலோன் விடுவிக்கப்பட்டது. கலே தாக்கப்படுகிறது. ஷெல்ட்டையும் அதன் சங்கம பாகத்தையும், டெர்னேகானுக்கருகில் படைகள் அடைந்துவிட்டன. கலே பேரில் 8,500 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன.

கிழக்குப் போர்முனை.—பின்லாந்து சரண்புகுந்தபின் பால்டிக் பிரதேசத்தில் அநேக சம்பவங்கள் நேரிட்டிருக்கின்றன. எஸ்தோனியாவின் தீவுகளைத்தவிர மற்ற பாகம் விடுவிக்கப்பட்டது. நார்வா, டார்டுவிலிருந்து முன்னேறிய செம்படை ஒன்றன்பின் ஒன்றாக, எஸ்தோனியாவின் தலைநகரமான டாலின் (ரெவால்), டார்டு (டொர்பாட்), வால்கா, ராக்வெரி, பார்னு, பால்டிஸ்கி, ஹாப்ஸலு முதலியவற்றைப் பிடித்தபின் எஸ்தோனியாவை விடுவித்தன.

வொர்ம்ஸி, ஹிலு-மா (டாகோ), சாரெ-மா (ஓசல்) என்ற எஸ்தோனியத் தீவுகளிலுள்ள ஜெர்மன் படைகள் தாக்கப்படுகின்றன. அவைகளில் வொர்ம்ஸி விழுந்துவிட்டது.

ரீகாவுக்கான போர் நெருங்கிவிட்டது.

வார்ஸாவுக்கான போர் நடைபெறுகிறது. இங்கிலாந்தின் பறக்கும் கோட்டை விமானங்கள் போலிஷ் படைகளுக்கு ஸப்ளைகளை விமான மூலம் போடுகின்றன. தெற்குப் போலந்தில் கார்பேதிய மலைகளிலுள்ள டார்கா என்ற நகரம் பிடிபட்டது.

ருமேனியாவுக்குள், லிபாரா, ஆராட், பிடிபட்டன.

செம்படை ஹங்கேரிய எல்லைச் சரகத்தை அடைந்துவிட்டது.

மார்ஷல் டிடோவின் படைகள் யூகோஸ்லாவியாவின் தலைநகரமான பெல்கிரேடை அணுகி விட்டதாகச் சொல்லப்படுகிறது. பாஸ்னியாவிலுள்ள பெரிய நகரமான பான்சாலூகா பிடிபட்டது. சொல்டாவிலுள்ள ஜெர்மன் படைகள் துரத்தியடிக்கப்பட்டபின் டால் மேஷியத் தீவுகள் விடுவிக்கப்பட்டன.

இதாலி.—கோதிக் அரணின் கிழக்குக் கோடியிலுள்ள ரிமினி பிடிபட்டது. கோதிக் அரண் பூராவும் நொருங்கிவிட்டது.

ரிமினி விழுந்தபின் 5-ம் படை லம்பார்டி சமவெளிக்குள் நுழைந்து பொலோனுவை நோக்கி முன்னேறுகின்றன.

லம்பார்டி சமவெளியை நோக்கி முன்னேறும் 8-ம் படை சான் மாரினோவுக்குள் நுழைந்து அதை விடுவித்தது. சான்மாரினோ ஜெர்மனிமேரில் போர் தொடுத்தது. பிளாரென்ஸுக்கு வடக்கில் படைகள் பூடாக் கணவாயை அடைந்துவிட்டன. அது மாரகியா, ரூபிகன் நதிகளைத்தாண்டி போ நதிப் பள்ளத்தாக்குக்குள் முன்னேறும் வாசலைப் பெற்றுவிட்டது.

பஸிபிக்.—பிலிப்பைன்ஸின் தலைநகரமான மணிலா இரண்டுதடவை விமானங்களால் தாக்குண்டது. முதல் தாக்குதலில் 37 ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது 205 விமானங்கள் அழிக்கப்பட்டன.

இரண்டாவது தாக்குதலில் 200 விமானங்கள் நான்கு பகுதிகளாகத் தாக்கி விமான தளங்களையும், துறைமுக அமைப்புகளையும் பழுது செய்தன.

அமெரிக்க விமானங்கள் சைனுவிலுள்ள நாங்கிங், காண்டன்பேரில் குண்டுகளைப் பொழிந்தன. பார்மோசா ஜலசந்தியிலுள்ள 8,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள கப்பல்கள் பேரிலும், மஞ்சூரியாவிலுள்ள ஆங்க்சாவிலுள்ள தொழிற்சாலை, ரசாயன உற்பத்தி சாலைகள் பேரிலும் வெடிகுண்டுகள் வீசப்பட்டன.

சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

17—9—44. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்—ரயில்வே தளங்கள், எண்ணெய்கிணறுகள்.—புடாபெஸ்ட் (Budapest).

எதிரி ரயில் ஜங்ஷன்கள்.—ஹங்கேரி (Hungary).

இரவு.—இலக்குகள்—பிரெமென் (Bremen).

தளவாடக்துவியல்கள்—ஹாலந்து (Holland).

இதாலி (Italy).

எதிரி முனைகள்.—கோதிக் அரண் (Gothic Line) தற்காப்புகள்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—கெண்டாரி (Kendari).

ஜப்பானியக் கப்பல்கள்—கெண்டாரி (Kendari).

பர்மா (Burma).

போக்குவரத்து இலக்குகள்.—மத்திய பர்மா (Central Burma).

18—9—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—பாலங்கள், யுத்த தளவாடங்களை தயார் செய்து சேகரிக்துமிடங்கள்—ஹங்கேரி (Hungary), யூகோஸ்லாவியா (Yugoslavia).

துருப்பு இலக்குகள், சண்டை இடங்கள்—பிரான்ஸ் (France), ஜெர்மனி (Germany).

இரவு.—துறைமுகம்—பிரிமெர்ஹாவன் (Bremerhaven).

விமான நிலயம்.—ஹாலந்து (Holland), ஜெர்மனி (Germany).

பேர்லின் (Berlin), புடாபெஸ்ட் (Budapest).

ரயில்வே ஜங்ஷன்—ஹங்கேரியிலுள்ள ஸாப் (Csop).

இதாலி (Italy).

ரஸ்தா ரயில் போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி.

துருப்பு முகாம்கள், பீரங்கி முகாம்கள், பலப்பட்ட இடங்கள்—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான நிலயங்கள்.—ஹால்மஹோரா (Halmahera).

ஜப்பானியக் கப்பல்கள்.—ஸெலிபஸ் (Celebes).

ரயில்வே ரிப்பேர்கள் பாதுகாப்புகள்—ஸுமத்ராவிலுள்ள ஸிக்லி (Siegli).

பர்மா (Burma).

எதிரி இலக்குகள்.—அரக்கான் (Arakan).

எதிரி சைனியங்கள்.—டிடிம் ரஸ்தா (Tiddim Road), சிண்ட்வின் (Chindwin), இவைகளின் அருகிலுள்ள பிரதேசங்கள்.

பாமோ (Bhamo).

ரயில்வே பாலஙகள் நீர்வீழ்ச்சிகள்.—தென் பர்மா (South Burma).

19—9—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இரண்டு பாலங்கள்—யூகோஸ்லாவியா (Yugoslavia).

எதிரி அரண்கள், டாங்கிகள், பீரங்கிகள்.—மேற்கு அரங்கிலும், கிழக்கு அரங்கிலும் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

இரவு.—போக்குவரத்துகள்—ரெயடா (Rheyda), மஞ்சன் (Munchen), கிலாட்பாக் (Gladbach).

படதுகள்.—ரையினில் (Rhine), துருப்பு ஏற்றிச் செல்பவை.

ரயில்கள்.—இம்மேரி (Emmerich).
ஹங்கேரியின் தலைநகரம் புடாபெஸ்ட் (Budapest).
ரயில்வே ஜங்ஷன்.—டிரான்ஸில்வேனியா விலுள்ள ஸாது மாரி (Satu-Mare).

இதாலி (Italy).

பீரங்கிகள், துருப்பு முகாம்கள்—ரிமினி (Rimini)யின் மேற்கு.
எதிரி இலக்குகள்.—அம்பாய்னு (Amboina).
எதிரிக் கப்பல்கள்.—ஜினோவா (Genoa) வளைகுடா.

தூரகிழக்கு (Far East).

விமான நிலயங்கள், ராணுவ நிலயங்கள், ஸப்ளைத் துவியல்கள்.-தென் பிலிப்பைன்ஸ் (South Philippines).
எதிரி இலக்குகள்.—அம்பாய்னு (Amboina)
விமான நிலயம்.—ஹால்மஹேரா (Halmahera).

பர்மா (Burma).

ரயில் தளங்கள்.—மாண்டலே (Mandalay), யைச்சுற்றிலும்.
இலக்குகள்.—அரக்கான் (Arakan), சிண்ட்வின் (Chindwin) பிரதேசம்.

20—9—44. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—துறைமுக எதிரி ஸ்தாபனங்கள்.—கலே (Calais).
ரயில்வேப் பாலங்கள்.—ரயில் தளங்கள்.—ஹங்கேரி (Hungary).
ரயில்வே தளங்கள்.—ஜெர்மனியிலுள்ள டிரையெர் (Trier)
இரவு.—சுரங்கவேடி பாவுதல்— எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

எதிரி சைனியங்கள் பீரங்கி ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்,

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.-பாதுகாப்பு பிரதேசங்கள்.—டாவோ (Davao) பிரதேசம்.
நகரம்.—டிமோரிலுள்ள லாட்டம் (Lautem)
ஜப்பானிய விமான நிலயங்கள்.—ஹால்மஹேரா (Halmahera).
ஜப்பானியத் துருப்புக் கப்பல்.—ஸெலிபஸ் (Celebes).
பிலிப்பைன்ஸிலுள்ள மணிலா (Manila).

பர்மா (Burma).

தரைப்படைகளுக்கு உதவி.—அரக்கான் (Arakan), டிடிம் ரஸ்தா (Tiddim), சிண்ட்வின் பிரதேசம் (Chindwin).
ரயில்வே இலக்குகள்.—மத்திய பர்மா (C. Burma).

21—9—44. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்—லட்விக்ஷாபன் (Ludwigshafen).
ரயில்வே தளவாடங்கள் தயார் செய்து சேமித்துமிடங்கள்.—மெய்ன்ஸ், (Mainz) காப்லென்ஸ் (Coblenz).
ரயில் போக்குவரத்துகள்.—ஹங்கேரி (Hungary).
இலக்குகள்.—செக்கோஸ்லோவாக்கியா (Czechoslovakia).
மோட்டார் போக்குவரத்துகள், பீரங்கி ஸ்தாபனங்கள், துருப்பு முகாம்கள்—யூகோஸ்லாவியா (Yugoslavia), கிரீஸ் (Greece).
இரவு.-ரயில் தளங்கள், ஹங்கேரியின் ஹெஹிஷாலம் (Heghyshalom).
ஸப்ளை இறக்குதல்கள்.—வார்ஸாவிலுள்ள போலிஷ் துருப்புகள்.
ராணுவ இலக்குகள்—மேற்கு அரங்கத்திலும், கிழக்கு அரங்கத்திலும் உள்ள பிரதேசங்கள்.

இதாலி (Italy).

எதிரி துருப்புகள் போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி.

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.-பிலிப்பைன்ஸிலுள்ள மணிலாத் துறைமுகத்தில்.
விமான தளம்.—மணிலா (Manila), ஹால்மஹேரா (Halmahera).
கப்பல்கள்.—ஸீரம் (Ceram).
டிமோரிலுள்ள லாட்டம் (Lautem).
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—அர்க்கபெஸான் (Arakabesan), மோயென் (Moen) தீவு.
இலக்குகள்.—பாகன் (Pagan), மார்லஸ் (Marlus).

பர்மா (Burma).

தரையிலுள்ள துருப்புகளுக்கு உதவி.—அரக்கான் (Arakan), டிடிம் ரஸ்தா (Tiddim Road), சிண்ட்வின் (Chindwin) பிரதேசம்.

22—9—44 (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.-தொழிற்சாலை இலக்குகள்.-ஜெர்மனியிலுள்ள காஸ்ஸெல் (Kassel) பிரதேசம்.
ராணுவ இலக்குகள்.—ஜெர்மனியிலுள்ள முனிலா (Munila).
விமானச் சண்டைகள்.-நிஜ்மெகன் (Nijmegen), லோகெம் (Lochem) பிரதேசங்கள்.
எதிரிப் போக்குவரத்துகள்.-ஹங்கேரி (Hungary), யூகோஸ்லாவியா (Yugoslavia).
ராணுவ இலக்குகள்.—கிரீஸ் (Greece), அல்பேனியா (Albania).
ஜெர்மானியக் கப்பல்கள்.—எஸ்தோனியாவிலுள்ள டாலின் (Tallinn).
துறைமுகங்கள்.—ரிகா (Riga), பெர்னுய் (Pernoy).
இரவு :—துறைமுக ஸ்தாபனங்கள்.—கிரீஸிலுள்ள ஸலோனிகா (Salonika).
துறைமுக ஸ்தாபனங்கள்.—கலே (Calais)ப் பிரதேசம்.

இதாலி (Italy).

ரயில் ரோட் பாலங்கள்.-போ (Po) சமவெளி.

ரஸ்தாப் பாலங்கள், மோட்டார்போக்குவரத்துகள், சேமிப்பு.—யுத்தம்நடக்கும் பிரதேசங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

கரோலைன்ஸ் தீவுகளிலுள்ள யாப் (Yap) தீவு.

ஜப்பானியக் கப்பல்கள், விமான நிலயங்கள்.-டிமோர் (Timor) முதல் ஸாலமன்ஸ் (Solomons) வரை.

ஜப்பானிய விமான நிலயங்கள், ஸ்தாபனங்கள்.-ஸீரம் (Ceram), ஸெலிபஸ் (Celebes).

பர்மா (Burma).

மோட்டார் போக்குவரத்துகள், நதிப்படகுகள்.-அரக்கான் (Arakan) கடற்கரை, மத்திய பர்மா (Central Burma).

23—9—44. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள், இதர இலக்குகள்.—மியூனிச் (Munich) பிரதேசம்.

ரயில் தளங்கள்.—கிரீஸிலுள்ள லாரிஸ்ஸா (Larissa), தென் ஆஸ்திரியா (South Austria).

போக்குவத்துகள் இலக்குகள்.-வட பிரான்ஸ் (North France), ஹாலந்து (Holland), மேற்கு ஜெர்மனி (West Germany).

பாலங்கள், படகுகள்.—ஹாலந்து (Holland).

எதிரி சைனியங்கள், பீரங்கிஸ்தாபனங்கள்.-பிரான்ஸிலுள்ள ஆர்ன்ஹெம் (Arnhem).

இரவு.—துறைமுகம்.—ஜெர்மனியிலுள்ள நியூஸ் (Neuss).

தொழிற்சாலை இலக்குகள்.—மன்ஸ்டர் (Munster), போகம் (Bochum).

படகுகள்.—ரைன் (Rhine), மாஸ் (Mass).

வண்டிகள்.—கோலோனுக்கு (Cologne) மேற்கு.

இதாலி (Italy).

பாலங்கள், எண்ணெய்க் குவியல்கள்.-வடக்கு இதாலி (North Italy).

எதிரி போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பல்கள்.—ஏட்ரியாடிக் (Adriatic), ஜினோவா (Genoa) வரை குடா.

தூரக்கிழக்கு (Far East).

13 ஜப்பானிய தளங்கள்—(பிலிப்பைன்ஸ் முதல் பொகன்வில்லி வரையில்).

ஜப்பானிய ஸப்ளை வண்டிகள்.—ஸெலிபஸ் (Celebes), ஹாலமஹேரா (Halmahera).

விமான எதிர்ப்பு பீரங்கி நிலயங்கள்.—டிமோரிலுள்ள லாட்டம் (Lautem).

படகுகள், சிறிய படகுகள்—பாண்டா (Banda) கடல்.

ஜப்பானிய ராணுவ ஸ்தாபனங்கள்—சைனாவிலுள்ள ஹாங்கௌ (Hankow).

பர்மா (Burma).

ரயில்வே தளங்கள்—தாஸி (Thazi).

நீராவி யந்திரங்கள், சேமிப்பு நிலயங்கள்—மத்திய பர்மா (Central Burma).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

18—9—44. (திங்கட்கிழமை)

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

அமெரிக்கத் துருப்புகள்—மோரோட்ய் (Morotoi) தீவு.

19—9—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து லண்டன் பிரதேசம்.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

20—9—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.-தென் கிழக்கு இங்கிலாந்து.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேச சைனியங்கள்—மோரோடோ (Moroto) தீவு.

21—9—44. (வியாழக்கிழமை) and
22—9—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

23—9—44. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

24—9—44. (ஞாயிற்றுக்கிழமை.)

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (Southern England).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

மேற்குப் போர்முனை. ஜூன் மாதம் 6-ம் தேதி நார்மண்டியில் நேசதேசப்படை களிறங்கியபின் நூறு நாட்களுக்குள்ளாக பிரான்ஸ் விடுதலைபெற்றது. ஸெப்டம்பர் 12-ம் தேதியன்று நேசதேசப்படைகள் முதன் முதலாக

ஜெர்மன் எல்லையைத் தாண்டிச்சென்றார்கள். அதற்குப்பின் மற்ற இடங்களிலும் ஜெர்மன் எல்லை கடக்கப்பட்டது. பெல்போர்ட் வெளியில் அமெரிக்க 3-வது 7-வது படைகள் ஒன்று சேர்ந்தபின் நேசதேசப் போர்முனை ஹாலந்திலிருந்து ஸ்விஸ் எல்லைச் சரகம் வரையில் பரவி இருக்கிறது. இந்தப் பிராந்தியத்தில் ஆறு நேசதேச சேனைகள் ஈடுபட்டிருக்கின்றன. அமெரிக்கர்கள், பிரிடிஷார்கள், கனேடியர்கள், அவர்களுக்கு உதவியாக பிரெஞ்சு போலிஷ் படைகள். ஸீக்பிரட் அரண் ஆகனிலிருந்து டிரியர்வரையில் 20-மைல் அளவில் கடுமையாகத் தாக்கப்படுகிறது. அநேக இடங்களில் அரண் ஊடுருவிச் செல்லப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்தில் 8-மைல்கள் அளவிற்குப் பிளவு ஏற்பட்டிருக்கிறது. இந்த அரணுக்கு உப பலமாக இருக்கும் அநேக கோட்டைகள் பிடிபட்டன. ஜெர்மனியில் போர்ஸ்டபாக், கோப்செஹன், வொர்ம்ஹாப், ஹெர்கன்ராத், கெம்மனக், லாம்மர்ஸ்டாப், ஸ்டோல்பர்க் பிடிபட்டன. ஆகன் போர்க்களமாகிவிட்டது.

ஸீக்பிரட் அரணின் மத்தியிலுள்ள ஆகனைப்பற்றி ஹிட்லர் கவலைப்படவில்லை. அதன் வடக்குக்கோடியான டச்சு எல்லைச் சரகத்துக்கும், கடலுக்கும் மத்தியிலுள்ள பாகம்தான் அவனுக்கு கவலையை உண்டாக்குகிறது. இந்த இடத்தில் தற்காப்புகள் அமைக்கப்பட்டிருக்கிறதா என்பது சந்தேகிக்கக்கூடியதாக இருக்கிறது, அப்படி இருந்தாலும் அதுதான் பலஹீனமான பாகம். இந்தப்பக்கத்தில் ஸீக்பிரட் அரணைத் தாண்டிச் சென்றுவிடலாம்.

இந்த இடத்தில்தான் பிரிடிஷ் படைகள் தரை மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் தாக்குதல் செய்துவருகின்றன.

வி வி வி வி வி

வீரம் பொருந்திய முன்னேற்றம். இந்த லக்ஷியத்துடன் ஜெனரல் டெம்ப்ஸியின் படைகள் மிகவும் வேகமாக முன்னேறியிருக்கின்றன. இதற்கு முன் இப்படைகள் ஸேன் நதியிலிருந்து பிரஸ்ஸெல்ஸுக்கு தினசரி 35 மைல்கள் வீதம் ஆறு நாட்களாக முன்னேறினார்கள். இப்பொழுது அப்படைகள் எண்டோவனிலிருந்து ஹாலந்திலுள்ள நிஜ்மேகன் வரையில் 39 மைல்களை ஐந்து மணி நேரங்களுக்குள் கடந்து சென்றார்கள். மாஸ் நதியும் இதற்குள் தாண்டப்பட்டது. அவர் ரைன் நதியின் தாழ்வரைகளையும் தாண்டி அதற்கும், அதற்கு வடக்கிலுள்ள லெக் நதிக்குமிடையிலுள்ள வெளிக்குச் சென்று விட்டார்.

வி வி வி வி வி

தீரம் பொருந்திய படையிறக்கம். ஜெனரல் டெம்ப்ஸிக்கு உதவிசெய்வதற்காக ஸெப்டம்பர் 17-ம் தேதியன்று ஜெர்மன் எல்லைக்கு சமீபத்தில் தெற்கு ஹாலந்தில் ஆர்ன்ஹீமுக்கு சமீபத்தில் பிரிடிஷ் படைகள் விமான மூலம் இறங்கியதும் ஒரு அரிய செய்கையாகும். ஒரு பெரியபடை, டாங்கிகளுடனும், மோட்டார்களுடனும் பீரங்கிகளுடனும், உணவுப்பொருள் குவியல்களுடனும், டாக்டர்களுடனும், ஆஸ்பத்திரிகளுடனும், சகலவிதமான சர்பாரக்களுடனும் இதுவரையில் விமானமூலம் இறங்கியதில்லை. ஆயிரம் கிளைடர் விமானங்களிலும், போக்குவரத்து விமானங்களிலும் படைகள் ஹாலந்திலிறங்கின. அவைகள் சரியான இடத்திலும் சரியான சமயத்திலும் இறங்கியது அற்புதச்செய்கையாகும். ஜெர்மனியில் எந்த இடத்திலும் விமானமூலம் படைகளிறக்கப்படுமென்பதை ஹிட்லர் இப்பொழுது அறிந்துகொள்ளுவான். இதிலிருந்து நேசதேசத்தாரின் விமானப்படையின் உயர்வும், அதன் சக்தியும் புலப்பட்டுவிட்டன. பிரிடனில் இவ்வித ஆதிக்கம்பெற 1940-ம் வருஷத்தில் ஹிட்லர் செய்த முயற்சி பயன்படவில்லை.

வால், லெக் நதிகளுக்கு மத்தியில் இந்த வாரத்தில் கடும் போர்கள் நடைபெற்றன. லெக் நதியைத் தாண்டிச் சென்று ஆர்ன்ஹீமிலுள்ள படைகளுடன் ஒன்றுசேர டெம்ப்ஸி முயலுகிறார். ஜெர்மானியர்கள் இதை நடைபெறாமல் தடுக்க முயலுகிறார்கள். ஜெர்மானியர்கள் ஆர்ன்ஹீமிலுள்ள படைகளையும் டெம்ப்ஸியின் படைகளுக்குப் பின்னாலுள்ள போக்குவரத்து மார்க்கங்களையும் தாக்கினார்கள். எண்டோவன் ரஸ்தா அநேகம் தடவைகளில் துண்டிக்கப்பட்ட போதிலும் சீக்கிரமாகப் பழுது பார்க்கப்பட்டது. விமானமூலம் இறங்கிய படைகள் சுற்றி வளைக்கப்பட்டு, விமானமூலம் சாமான்களையும், உதவியையும் பெற்றுக்கொண்டு தீரத்துடன் போர்புரிந்தது. அதைப்பற்றி ஜெர்மனி பின்வருமாறு ஒரு விருத்தாந்தத்தை வெளியிட்டிருக்கிறது.

"விமானமூலம் இறங்கிய பிரிடிஷ் படைகள் வீடுகளிலும் தோட்டங்களிலும் பலமாக நின்றுகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜன்னலிலிருந்தும் குண்டுகள் சரமாரியாக வருகின்றன. ஒவ்வொரு இடத்திலும் யந்திர பீரங்கிகள் ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன, மேல்கூரை இடிந்து, சுவர்கள் நொறுங்கும்பொழுதுதான் அவர்கள் இந்த கேந்திர ஸ்தானங்களை விட்டுவெளியேறுகிறார்கள்.

விமானமூலமிறங்கிய படைகள் இரண்டு வருடங்களாக நல்ல பயிற்சி பெற்றவர்கள். சாம்ராஜ்யத்தின் எல்லா பாகங்களிலிருந்தும், எல்லாப் போர்முனைகளிலிருந்தும் வந்தவர்கள் அதில் சேர்ந்திருக்கிறார்கள். கம்மாண்டோப்படைகளாகவும், குடை, கிளைடர், தருப்பேற்றிச் செல்லும் விமானங்களிலிருந்து இறங்கும் பொழுதே போர் புரியவும், தரைப்படைகளாகவும், பீரங்கிப்படைகளாகவும், டாங்கிப்படைகளாகவும் போர்புரியத் தயாராகயிருக்கிறார்கள். எதிரிகளுடன் மட்டும் அவர்கள் போர் புரியவில்லை. பருவகால அசௌகரியத்தினால் ஸப்ளைகள் வரக்கூடவில்லை. 9 நாள் போருக்குப்பின் இறங்கிய 8,000 பேர்களில் 2,000 பேர்கள் மட்டும் பின்வாங்கினார்கள்.

வி வி வி வி வி

லண்டனுக்காகப் போர். பிரிடனுக்காகப் போரும், லண்டனுக்காகப் போரும், ஆர்ன்ஹீமுக்காகப் போரும் ஆகாயப் போரில் பிரிடனின் தீரத்துக்கு உதாரணங்களாகும். முதல் நடவடிக்கையில பிரிடன் காப்பாற்றப்பட்டது. இரண்டாவது நடவடிக்கையில் லண்டன் ஒரு அபாயத்திலிருந்து தப்பிவிட்டது. மூன்றுவது நடவடிக்கையில் ஜெர்மனியைப் படையெடுக்க ஹாலந்தில் முன்னேறும் வாசல் அமைக்கப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் கால்வாய்க் கரையிலுள்ள துறைமுகங்கள் ஒன்றன்பின் ஒன்றுக வீழ்ச்சி பெறுவதாலும், கலேயும் தாக்கப்படுவதாலும் பறக்கும் வெடி குண்டுகள் புறப்படும் நிலயங்கள் அழிக்கப்படும். லண்டனில் விளக்குகள் மறுபடியும் ஏற்றப்பட்டுவிட்டன. லண்டனிலிருந்து வெளியேறிய அகதிகள் தாயகம் திரும்பிவிட்டார்கள். கால்வாய்க் கரையிலுள்ள துறைமுகங்களைத் தற்காப்பு செய்தால் நேசதேசப்படைகளுக்கு வரும் ஸப்ளைகளைத் தாமதப்படுத்திவிடலாமென்று ஜெர்மனி நம்பியிருந்தது. அந்த நம்பிக்கையை இப்பொழுது அது இழந்தது.

வி வி வி வி வி

கிழக்குப்போர் முனை. டாலின் விழுந்தபின்னும், பின்லாந்து வளைகுடாவிலுள்ள முக்கியமான துறைமுகங்கள் பிடிபட்டபின்னும் எஸ்தோனியாவின் விடுதலை பூர்த்தியாகிவிட்டது. ஆகிலும் பால்டிக்கிலுள்ள எஸ்தோனியாவைச் சேர்ந்த தீவுகள் இன்னும் எதிரிவசமிருக்கின்றன. பின்லாந்து வளைகுடாவில் கடற்போர்கள் நடைபெறுகின்றன. லாட்வியாவின் தலைநகரமான ரீகா கூடிய சீக்கிரம் விழுந்துவிடும்.

வி வி வி வி வி

பின்லாந்தின் யுத்த நிறுத்தம். பின்லாந்து யுத்த நிறுத்த ஷரத்துக்களை ஒப்புக் கொண்டு, போரிலிருந்து வாபஸாகி விட்டதிலிருந்து கிழக்கு ஐரோப்பாவின் நடவடிக்கை நன்கு புலப்படுகிறது. ஹிட்லரின் புதிய உலக அமைப்பு திட்டம் மறைந்து விட்டது. அதன் இறுதி அமைப்பு உருவாகாவிட்டாலும், நேசதேசத்தார்கள் சமாதான முறையிலும் நீண்ட நோக்கத்துடனும் ருமேனியா, பல்கேரியா, பின்லாந்து எஸ்தோனியா முதலிய நாடுகளுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டுவிட்டது. எஸ்தோனியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டு விட்டது. ருஷ்ய எல்லைச் சரகத்திலுள்ள நாடுகள் ருஷ்யாவின் அமுலுக்குட்படாது, அல்லது அவரவர்களுடைய ஜனசமூக பொருளாதார அமைப்புகளையும் கைவிட்டு விடாது. ருஷ்யாவின் அக்கரைகளுக்கு விரோத மன்னியில் அவைகள் தங்களுடைய இஷ்டப்படி அபிவிருத்தி முறைகளைக் கையாளலாம். யுத்தத்துக்குப்பின் ஸ்டாலின் வேண்டுவதெல்லாம் ருஷ்யாவிற்கு பத்திரம் ஏற்படவேண்டுமென்பது தான். பத்திரமிருந்தால் தான் ஹிட்லர் இழைத்த அட்டூழியங்களைச் சரிப்படுத்த முடியும்.

வி வி வி வி வி

இதாலி. கோதிக் அரண் பூராவும் நொருங்கி விட்டது. ரிமினி வீழ்ச்சி பெற்ற பின் நேசதேசப் படைகள் போ நதிப் பள்ளத்தாக்கை அடைந்து விட்டார்கள். கெஸ்ஸல்ரிங்கின் படைகளை நிர்மூலமாக்குவதற்கு இன்னும் அநேக காரியங்களை நாம் செய்ய வேண்டியிருந்த போதிலும், நாம் ஏற்கனவே அநேக நடவடிக்கைகளைக் கையாண்டுவிட்டோம். மத்தியதரைக்கடலிலுள்ள விமானப்படை ஏட்ரியாடிக் கடலின் வட பாகத்துக்கு நெருங்கி வந்து விட்டபடியால் டான்யூப் நதியின் தாழ்வரைகளிலுள்ள ஜெர்மன் எண்ணெய் ஸப்ளை நிலயங்களைக் கைப்பற்றுவதிலும், பால்கன் நாடுகளின் ஜனங்களை விடுவிப்பதிலும் ருஷ்ய சேனைகளுக்கு உதவியளித்திருக்கின்றது. இறுதியில் இதாலியிலுள்ள நேசதேச சேனைகள் யூகோஸ்லாவிய தேசாபிமானப்படைகளுடன் சேர்ந்து கொண்டு ஹிட்லரைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் வளையத்தை தென் கிழக்கு ஐரோப்பாவிலும் பூர்த்தி செய்து விடும்.

ஜெர்மனி. தோல்வி ஏற்படக்கூடுமென்று இப்பொழுது தான் ஜெர்மானியர்களுக்கு அறிவூட்டப்படுகிறது. நேசதேசப் படைகள் ஜெர்மனிக்குள் புகுந்துவிட்டனவென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஹிட்லரைக் கொல்ல முயற்சி செய்தபின் அவன் சொற்பொழிவாற்றியபின் அவன் பிரசங்கம் செய்ய முன் வரவில்லை. "ஹிட்லர் எங்கே, அவன் உயிருடனிருக்கிறானா அல்லது நாட்டைவிட்டு ஓடிவிட்டானா" என்று அநேகர்கள் கேட்கிறார்கள். நாங்கள் எப்பொழுது தாயகம் செல்லுவோமென்று ஜெர்மனியிலுள்ள அயல்நாட்டுத் தொழிலாளர்கள் ஆவலுடன் கேட்கிறார்கள். ஜெர்மனியைத் தற்காப்பு செய்வதற்காகப் பொசுக்கு வேலையை கையாளுவதென்ற கொள்கையை ஜனங்கள் அபத்தப் பேச்சு என்று நிந்திக்கிறார்கள். ஸீக்பிரட் அரண் விழுந்தபின் தாய்நாட்டுத் தற்காப்பு அரண் எங்கிருக்கிறது? ஹிட்லரின் மனதில் இது தோற்றமுள்ளதே தவிர உண்மையில் அது எங்கிருக்கிறதென்று அவர்கள் வினவுகிறார்கள். இனிமேல் நம்பிக்கைக்கு பாத்திரமாகாதவர்கள் என்று நினைத்த S. S. படைகளில் அநேகரை ஹிட்லர் பர்த்தரப்பு செய்து வருகிறான். பெரிய தொழிற்சாலைகளிலுள்ள நிலயங்களிலுள்ள எதிர்ப்பு கோஷ்டிகள் ஜெர்மனியின் ராஜீய, ராணுவ நிலைமையை ஜெர்மன் ரகசியப் போலீஸின் பார்வைக்குட்பட்டும்கூட கூட்டங்கூட்டமாக விவாதித்து வருகிறார்கள். பொதுஜனக் கோர்ட்டு இப்பொழுது பலமாக வேலைசெய்து வருகிறது. முன்போல கோயபல்ஸ் புழுகவில்லை. ஹாஹா பிரபு மறந்துவிட்டார்.

வி வி வி வி வி

லண்டனுக்கான போர். பறக்கும் வெடிகுண்டுகள் லண்டனைப் பலமாகத் தாக்கியபொழுது, அநேகர்கள் நிர்வாகத்தின் பேரில் குறைசொல்லி, நிர்வாகிகள் முன் ஜாக்கிரதை செய்யவில்லை என்று தூஷித்துவந்தார்கள். உண்மையில் ராணுவ டிரக்டர்கள் பதில் முறைகளை அமைக்க அநேக மாதங்களாக பிரயாசை செய்துவந்தார்கள். பிரிடிஷ் ஒலிபரப்பிலும் லண்டனின் பிக்பென் என்ற மணியோசை நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக கிராமபோன் ரிகார்டு மூலம் மணிகள் சப்திக்கப்பட்டன. ரகசிய அறிக்கைப் படைகள் வெடிகுண்டுகள் பினமண்டியில் உற்பத்தி செய்யப்பட்டன என்று வெளியிட்டன. விமானத் தாக்குதல் மூலம் பினமண்டி அழிக்கப்பட்டது. அதன்பின் கலேப் பகுதியிலுள்ள பறக்கும் குண்டு நிலயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. அதன்பின் ஜெர்மானியர்கள் புதிய புறப்படும் நிலயங்களை அமைத்தபொழுது வெடிகுண்டுகள் சில சமயம் இங்கிலாந்திலும் சில சமயங்களில் ஜெர்மனியிலும் விழுந்தன. பிரிடனுக்கு வரும் குண்டுகளை வழிமறிக்க ஆயிரக்கணக்கான புகைக் கூண்டுகளும் அவைகளின் படைகளும் கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்டன. கடைசியாக, பிரிடிஷ் ஸ்பிட்பையர், மஸ்கிடோ, மஸ்டாங்க், டெம்பஸ்ட் விமானங்கள் பறக்கும் வெடிகுண்டுகளை அழிக்கத் தயாராகயிருந்தன. லண்டனில் வெடிகுண்டுகள் விழுந்தவுடன் நெருப்புகளை அணைக்க திறமையுள்ள ஒரு படைத் தயாராகயிருந்தது. நகரத்திலிருந்து ஜனங்களை வெளியேற்றுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆகிலும் இந்தச் சங்கடம் தீர்ந்துவிட்டது. பறக்கும் வெடிகுண்டு வீச்சேற்பட்டபொழுது லண்டன் தீரத்துடன் அதை சமாளித்து நின்றது. இப்பொழுது வெளிச்ச மறைவு நீக்கப்பட்டுவிட்டது. வெளியேறியவர்கள் லண்டனுக்குத் திரும்பிவருகிறார்கள்.

வி வி வி வி வி

பசிபிக் பிராந்தியம். ஸெப்டம்பர் 15-ம் தேதியன்று பஸிபிக்கிலுள்ள ஜப்பானிய ஆக்கிரமிப்பு ஸ்தானங்களை இரண்டு இடங்களில் பலமாகத் தாக்கினார்கள். மாக் ஆர்தர் ஹால்மஹேராத் தீவுக் கூட்டத்திலுள்ள மோரோடாய்த் தீவில் படைகளை இறக்கினார். மற்றொன்று பாலாத் தீவுக் கூட்டத்திலுள்ள பெலியூ, ஆங்கார்த் தீவுகளிலிறங்கின.

அதன்பின் பிலிப்பைன்ஸின் தலைநகரமான மணிலாவை பஸிபிக் கடற்படையைச் சேர்ந்த விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் இரண்டு தடவை தாக்கின. எதிரியின் 37 யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது பழுதாக்கப்பட்டன. 205 விமானங்கள் அழிக்கப்பட்டன. காரொலைன் தீவுக் கூட்டத்திலுள்ள டிரக் தீவுகளைத் தாக்கியதைவிட மகத்தான முறையில் பிலிப்பைன்ஸ் முதல் முதலில் பலமாகத் தாக்கப்பட்டிருக்கிறது. மணிலாவில் ஜப்பானியர்கள் பலமான தற்காப்புகளை அமைத்திருக்கிறார்கள்.

இந்த சம்பவங்களிலிருந்து நியூகினியாப் போர் முடிவடைந்து விட்டதென்றும், மத்திய பசிபிக்கிலுள்ள எதிரியின் தளங்கள் பூராவாக நொருக்கப்பட்டுவிட்டதென்றும் தோன்றுகின்றன. நேசதேசப்படைகள் ஜப்பானின் உள்நாட்டு தற்காப்பு பிராந்தியத்திற்குள் நுழைந்து விட்டன. இனிமேல் எதிர்ப்பு பலமாகயிருக்கும். ஆகிலும் இறுதியில் வெற்றி நமக்குத்தான்.

வி வி வி வி வி

சில்லரை விஷயங்கள்.

(1) பின்லாந்து ஜப்பானுடன் உறவுகளை ரத்து செய்தது.

(2) ஜெர்மன் கப்பல்கள் ஸ்விடிஷ் சமுத்திரங்களுக்குச் செல்லக்கூடாதென்று ஸ்வீடன் தடை செய்து விட்டது.

(3) சான்மெரினோ ஜெர்மனி பேரில் போர் தொடுத்தது.

(4) கோபன்ஹேகனிலும், மற்ற டேனிஷ் நகரங்களிலும் எல்லோரும் வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள்.

(5) பிரான்ஸுக்கும், ஸ்விட்லர்லாந்துக்குமிடையிலுள்ள எல்லைச் சரகம் திறக்கப்பட்டு விட்டது.

(6) பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள ஜப்பானியரின் அமுலுக்குட்பட்ட பொம்மை ஸமஸ்தானம் அமெரிக்கா பேரிலும், பிரிடன் பேரிலும் போர் தொடுத்தது.

ஜெர்மனியின் நிலை 1918-ம்ஹூத்தைவிட மோசமாயிருக்கிறது.

ஜெர்மனியின் அந்திய காலம்.

3-ம் ரீச் அதன் அருகாமையிலுள்ள நாடுகளை பிடித்து ஆக்கிரமிக்க சக்தியற்றுவிட்டது. அதன் எதிரிகளிடம் சீக்கிரம் சரணடையும் பால்கன் நாடுகளை ஆக்கிரமித்துள்ள துருப்புகள் கண்டிப்பாய் திரும்பு காலையில் நேசப்படைகளிடம் சிறைப்படும்.

வேலைகளிலே எங்கெங்கு திரும்பினாலும், ஹிட்லர் அங்கங்கு வருந்தும் மனத்தோரையும், தோல்வியடைந்த சைனியத்தையும் தான் காண்கிறான். பால்கன் நாடுகள். வட பின்லாந்து, நார்வே, இவைகளிலிருந்து வெளிப்பட்டவர்களும், கஷ்டத்துடன் ஹாலந்து, டென்மார்க்கு வட இதாலி இங்கிருந்து வந்தவர்களுமான ஜெர்மானியத்துருப்புகளிலிருந்தும், 1918-ல் சமாதானம் ஏற்பட்டபோது ஜர்மனியர் இருந்த நிலையினும் மோசமாயுளர் என்பது தெரிகிறது. இப்போது யுத்த முடிவு எவ்வாறு என்பது இனி சொல்லாமலே நன்கு வெளிப்படும்.

குரங்குச் சண்டையால் ஜெர்மனியர் அடைந்த அனுபவம் என்ன? அவர்கள் ஆக்கிரமித்த நாடுகளான பிரான்ஸ், நார்வே, டென்மார்க், போலந்து, கிரீஸ், யூகோஸ்லாவியா இந்நாடுகளின் மக்கள் அடைந்த அப்பலனை இவர்கள் அடையலாம் என்று நினைக்கிறார்களா? நாஸியர்களால் அல்லலுற்ற பல நாட்டினரும், பல ஜாதியினரும், அவர்கள் நஷ்டமுறுவதை கண்டிப்பாய் யாதொரு தாக்ஷண்யமுமின்றியும், பக்ஷாதாபமின்றியும் பார்க்க எதிர்பார்க்கிறார்கள்.

"பிரிடிஷாருடன் பேசுவதில் பயனில்லை".

ஹாஹாவின் "மறைவு"

(டெயிலி எக்ஸ்பிரஸ்.)

லார்ட் ஹாஹா என்ற மறுபெயருடைய வில்லியம் ஜாய்ஸ் மோஸ்லியன் பிரசார கர்த்தா கோயபில்ஸுக்கு துரோக பிரசாரியாகி, சென்ற ஒருவாரமாக அவன் குரலை ரேடியோவில் கேட்பதில்லை. அவர் எழுதிவைத்த "ஜெர்மனி பேசுகிறது".

"சமாசாரங்களின்மேல் உள்ள குறிப்பு" என்ற விஷயங்களை எட்வார்ட் ரோடரிக்டி யெட்ஸ் என்பவன் படித்து வருகிறான்.

கேப்பானில் நடந்த நடப்பு முதல் ஹாஹாவின் பேச்சுகள் வெர்ட் நாட்டுடன் ஒன்று சேர்ந்திருந்தது. அப்பொழுதுதான் அவன் தன் கடைசி விஷயத்தை பிரஸ்தாபித்தான். அப்பொழுது அவன் சொன்னான் "பிரிடிஷாராகிய நீங்கள் என்னபெறுகிறீர்கள்? இதன் பதில் ஒரு எலுமிச்சை. ஒரு ஆரஞ்சு."

யுத்த ஆரம்பகாலத்தில், பிரான்ஸ் வெளியேற்றத்துடன் ஹாஹா ஒரு நாளைக்கு நான்கு முறைகள் பிரசாரம் செய்தான். பிறகு மும்முறையாயிற்று. பிறகு இருமுறையாயிற்று. "D" நாளிற்குப்பிறகு ஒரு நாளைக்கு ஒரு முறையாயிற்று.

நேசதேச வெற்றி ஏற்பட்டபோது ஹாஹாவின் பிரசாரம், மிகவும் சாதாரணமாயிருந்தது. நேசதேசமுன்னேற்றத்தை மாற்ற முடியாதபோது ஹாஹா மாறினான். அவன் பேசினான் "நார்மண்டியில் உங்கள் கணவன்மார்களும், பிள்ளைகளும், உங்கள் மனதிற்கு உயர்ந்தோர்களும் ரத்த பாதையில் நடக்கிறார்கள்."

ஹாஹா, சின்னாட்களாக நார்மண்டியில் உள்ள நம்படைகளின் மனோநிலையைப்பற்றிக் கூறினான். ஆனால் அதில் முற்றிலும் தோல்வியடைந்தான்.

அவர் குறிப்பில் பாட்டு சம்பந்தப்பட்டது. மிகவும் நல்லது. ஆனால் "நீங்கள் கடலில் எறியப்பட்டு எலிகளாய் நாசமாவீர்கள் என்று அவன் பயப்படுத்திய வார்த்தைகள் வீண் வார்த்தைகள் ஆயின.

சிறிது சிறியதாய் அவன் வீர வார்த்தைகளும், பயப்படுத்தும் வார்த்தைகளும் மறைந்தன. ஏதாவது வாய்க்கு வந்தவைகளை பேசிக்கொண்டிருந்தான்.

பறக்கும் வெடி குண்டுகள் அவனை திரும்பவும் பிரசாரத்திற்கு இழுத்தது. ஆனால் இப்பொழுது முன்போல பாதி உண்மைகளோடு முழுப்பொய்யைக் கலக்கமுடியவில்லை.

'D' நாள்முதல், ஹாஹாவின் பொய்கள் மறைய ஆரம்பித்தன. பெர்லின் துணைவரோடு சேர்ந்தபோது சின்னாட்களுக்கு முன் "இந்தப்பிடிவாதமான பிரிடிஷாருடன் பேசுவதில் பயனில்லை. நீ அவர்களுக்காக என்ன சொலலியும் பயனில்லை" என்று சொன்னான்.

"பெரிய ஐரோப்பாவின் தகர்க்கமுடியாத கோட்டையைப்பற்றி ஒவ்வொரு நாளும் சொல்லிய அவன் இப்பொழுது மாறிவிட்டான்.

பிரான்ஸில் நேசதேச வெற்றியின் மகிமை.

போர்க்களத்தில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட நஷ்டம்.

(லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்)

ஒரு கக்ஷி மகத்தான வெற்றி பெற்றோமென்று சொல்லும்பொழுது மற்றொரு கக்ஷி திட்டப்படி கேந்திர ஸ்தானங்களுக்குப் பின்வாங்கினோமென்று சொல்லிவருகிறது. யுத்தத்தைக் கவனித்து வருகிறவர்களுக்கு உண்மை புலப்படவில்லை.

வெற்றிக்கு நம்பத்தகுந்த அடையாளமாக கைது செய்யப்பட்டவர்களின் சங்கியையும், எதிரி வசமான தளவாடங்களின் அளவும் காணப்படுகின்றன. இந்த அளவுகோலின் உதவியால்தான் பிரான்ஸில் நேசதேசத்தாரின் வெற்றியை நாம் மதித்துப் பார்க்கவேண்டும். நாஸிகளின் பிடிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட இடங்களை நாம் பொருட்படுத்தவில்லை.

ஆகையால் இப்பொழுது நான் புள்ளி விபரங்களை வெளியிடுகிறேன்.

ஜூன் 6-ம் தேதி முதல், ஆகஸ்டு 25 வரையில் 12 வாரங்களுக்குள் பிரான்ஸில் நான்கு ஜெர்மன் சேனைகள்—அதாவது 1, 7, 15, 5-வது பான்ஸர் படை முறியடிக்கப்பட்டன. அவைகளில் தோல்வி மூலம் 5 பான்ஸர் டிவிஷன்களும், 20 காலாட்படை பகுதிகளும்

அழிக்கப்பட்டன. பிரிட்டானியிலும், சானல் தீவுகளிலும், ஒரு குடைத்தருப்பு டிவிஷனும், மூன்று காலாட் படை பகுதிகளும் துணிக்கப்பட்டுவிட்டன. அதற்குப்பின் அநேக எதிர்ப்புப் படைகளும் துடைக்கப்பட்டுவிட்டன.

இந்த நடவடிக்கைகளில் கொல்லப்பட்டவர்கள், காயம்பட்டவர்கள், காணமல் போனவர்களுமாகச் சேர்ந்து 5,00,000 ஜெர்மானியர்கள் நஷ்டமாகிவிட்டார்கள். 3 லக்ஷம் பேர்கள் யுத்தக் கைதிகளாகிவிட்டார்கள். அவர்களில் பாதிக்குமேல் ஜூலை 25-க்குப்பின் கைது செய்யப்பட்டவர்கள். இதற்குமுன் ஸ்டாலின்கிராட்டிலும், டுனிஸியாவிலும் எதிரிக்கு 3 லக்ஷம் பேர்கள் நஷ்டமாகின. அவைகளில் அயல் நாட்டுத் தருப்புகளும் சேர்ந்திருந்தன. டுனிஸியாவில் பாதிக்குமேல் படையில் இதாலியர்களிருந்தார்கள். பிரான்ஸில் கைது செய்யப்பட்டவர்கள் எல்லோரும் ஜெர்மானியர்கள். இந்த நஷ்டத்தை ஜெர்மனி சகிக்கமுடியாது.

பிடிபட்டவர்களின் அந்தஸ்தைக் கவனிக்கும்பொழுது ஜெர்மன் படைகள், பலமாக அழிக்கப்பட்டனவென்பது வெளிப்படுகிறது. பிடிபட்டவர்களில் ஒரு சேனைத் தலைவர், இரண்டு படைத் தலைவர்கள், 15 பகுதித் தலைவர், ஒரு அரண் தலைவர்—இருந்தார்கள். கடற்கரையிலுள்ள தற்காப்பு அரண்கள் அழிக்கப்படும்பொழுது இன்னும் அநேக உயர்தர ஆபீஸர்களும் கைது செய்யப்படுவார்கள்.

பின்கண்ட தளவாடங்களும் நமது வசமாகிவிட்டன. 1,300 டாங்கிகள், 500 தாக்கும் பீரங்கிகள், 20,000 மோட்டார் வண்டிகள், 1,500 கனமான பீரங்கிகள், அநேக கடற்கரை பீரங்கிகள்.

ஏராளமான விமானங்களையும் எதிரி இழந்தான். ஆகாயத்தில் 2,000 விமானங்களும், தரையில் 1,000 விமானங்களும் அழிக்கப்பட்டன. ஜெர்மன் விமானப் படை பரிபாலிக்கப்பட்டு மிகவும் முக்கியமான அலுவல்களுக்குத்தான் அனுப்பப்பட்டதென்று நினைக்கும்பொழுது இந்த நஷ்டம் மிகவும் அபாரமானது. இந்த நஷ்டத்தில் நஷ்டமாகியிருக்கக் கூடியவற்றை நாம் சேர்க்கவில்லை.

ஜெர்மன் கடற்படையும் அதன் அளவுக்கு அதிகமாகவே நஷ்டமடைந்துவிட்டது. எல்லா ரகங்களும் 300 கப்பல்களும் இன்னும் ஏராளமான சாமான் கப்பல்களையும் எதிரி இழந்து விட்டான்.

மேலும் தூரதேசங்களிலுள்ள ஜெர்மன் படைகள் தாய்நாட்டிற்குத் திரும்ப முடியாமல் கைது செயயப்படுவார்கள். நார்வே, டென்மார்க், பின்லாந்திலுள்ள ஜெர்மன் ஆக்கிரமிப்புப் படைகள் அந்நாடுகளிலிருந்து தோற்று ஓட வேண்டுமேயல்லாது சகஜமாகப் பின் வாங்கமுடியாது. பால்கன் நாடுகளிலும், இதாலியிலுமுள்ள படைகள் நிச்சயமாகத் துணிக்கப்பட்டுவிடும்.

இவைகளிலிருந்து ஒரு படிப்பினை ஏற்படுகிறது. தோல்வியுற்றவர்களை அடக்கியாள வேண்டுமானல் வெற்றிபெற்றவர் உயர்வான முஸ்தீப்புகளுள்ள படைகளைக்கொண்டு சுதந்திரத்தை அழிக்க முற்படும் படைகளைவிட மிகுதியான படைகளை வைத்திருக்கவேண்டும். படைபலத்தைவிட மனஉறுதி மூன்றுமடங்கு பலமுள்ளதென்று நெப்போலியன் சொன்னன். இப்பொழுது அழிவை உண்டாக்கும் நவீன சாதனங்கள் அதிகரித்துவிட்டபோதிலும் நீதி முறையின் பலம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது.

பிரெஞ்சு தேசீய ஒத்துழைப்பு மந்திரி சபை.

ஜெனரல் டிகாலின் புதிய சபை.

வில்லியம் பாரெஸ்ட், (நியூஸ் கிரானிகிள்.)

ஜெனரல் டிகால் பிரெஞ்சு தேசீய ஒத்துழைப்பு மந்திரி சபையை அமைத்திருக்கிறர். புதிய பிரதிநிதி சபை தேர்ந்தெடுக்கப்படும் வரையில் இந்த சபை பிரான்ஸின் நிர்வாகத்தை நடத்தும். இந்த சபையில் ஜெர்மன் ஆக்கிரமிப்பின்பொழுது அங்கிருந்த ஒன்பது பேர்களும் ஆல்ஜியர்ஸ் நிர்வாகத்தில் உத்தியோகஸ்தர்களை வகித்த 13 பேர்களும் அங்கத்தினர்கள்.

தேசிய எதிர்ப்பு சபையின் தலைவராகயிருந்த சரித்திர ஆசிரியரான 45 வயதுள்ள ஜார்ஜஸ் பிடால்ட் ரெனிமாசிக்ளிக்குப் பதிலாக அயல்நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ரெனிமாஸிக்ளி லண்டனுக்கு அயல் நாட்டு ஸ்தானிகராகச் செல்லுவார்.

நான்ஸியில் சட்ட ஆசிரியரான 40 வயதுள்ள பியரி ஹென்றி டீட்கர், ஹென்றி பென்னட்டுக்குப்பதிலாக அறிக்கை இலாகா மந்திரியாக அமர்த்தப்பட்டிருக்கிறார். ஹென்றி பென்னட் மாஸ்கோவுக்கு அயல்நாட்டு ஸ்தானிகராகச்செல்லுவார். எதிர்ப்பு இயக்கத்தில் டீட்கருக்கு டிரஸ்டான் என்று பெயர். அவரை ஜெர்மானியர்கள் ஜூன் மாதத்தில் கைது செய்தார்கள். அவரை ஜெர்மனிக்கு ரயிலில் கொண்டுபோகும்பொழுது அவர் ரயிலிலிருந்து குதித்துத் தப்பி விட்டார்.

பிரெஞ்சு உள்நாட்டுப் படையில் பொது உடமைக் கக்ஷியைச் சேர்ந்த பிராங்க்டிரியூர்ஸ் கொரில்லாப் படையைத் தயாரித்த அதிகாரியான சார்லஸ் டில்லான் விமானப்படை இலாகாவில் பெர்னூன்ட் கிரேனியருக்குப் பதிலாக உத்தியோகம் வகிப்பார்.

ஜன சமூக சமஷ்டி உபதலைவரும், பிரிட்னியில் மாக்விப் படைகளின் தலைவருமான டாங்க் வி பிரிகெண்ட் இதற்குமுன் நிர்வாக சபையில் வகித்துவந்த விவசாய இலாகா மந்திரி வேலையில் ஊர்ஜிதம் செய்யப்பட்டார். உற்பத்தி இலாகா மந்திரியான ராபர்ட்லா கோஷ்டியும் நிதி இலாகா மந்திரியான லெபர்க்குவும் தங்கள் உத்தியோகங்களில் நீடித்திருப்பார்கள்.

வடக்கில் தொழிலாளர்களின் ஜன சமூகத் தலைவரான ஆகஸ்டின்லாரெண்ட் தந்தித் தபால் இலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜெர்மன் ஆக்கிரமிப்பு காலத்தில் பிரான்ஸில் டிகாலின் பிரதிநிதியாக இருந்த அலெக்ஸாண்டர் பார்டி தொழிலாளர் இலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஸெனட் சபையின் தலைவரான ஜூல்ஸ்ஜீயானெனி நிர்வாக மந்திரியாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

சௌகரியமேற்படும்பொழுது மற்ற வயது முதிர்ந்த ராஜதந்திரிகளும் நிர்வாக சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அதாவது ஜெர்மனியில் கைதியாகயிருப்பதிலிருந்து அவர்கள் விடுதலை பெற்றபின் என்று பொருள்படும்.

"நான்கு வருஷங்களாக பிரெஞ்சு எதிர்ப்புப் படைகளிடமிருந்த மன ஊக்கம் இந்த நிர்வாகத்திலும் காணப்படுகிறதென்று உத்தியோக முறையில் டிகால் ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறான்.

இந்த அறிக்கையில் மந்திரிகள் மூன்று கோஷ்டிகளாகப் பிரிவினை செய்யப்பட்டிருக்கிறார்கள், (1) எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர்கள், (2) பழைய பிரதிநிதி சபையின் அங்கத்தினர்கள் (இரண்டு ஸெனடர்களும் ஆறு டெபுடிகளும்) இவர்கள் எதிர்ப்பு இயக்கத்திலீடுபட்டவர்கள், (3) பிரான்ஸுக்கு வெளியில் டிகாலைப் பின்பற்றியவர்கள். முக்கியமாக காட்ரூ டிதெல்ம், ப்ளெவன், டிக்சியர், பிரான்ஸின் யுத்த முயற்சிகளை அதிகப்படுத்துவது, குடியரசு ஆக்ஷியின் சட்டதிட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவது, புனருத்தாரண வேலையைத் துவக்குவது, உலகத்தில் பிரான்ஸின் அக்கறைகளை நிலைநாட்டுவது—இவைதான் புதிய நிர்வாகத்தின அலுவல்கள்.

நிர்வாக சபையில் சகலவிதமான ராஜீய அபிப்பிராயமுள்ள கக்ஷிகளும் சேர்ந்திருக்கிறார்கள். பொதுவுடமைக் கக்ஷிக்காரர்களும், ஜனநாயகக் கக்ஷிக்காரர்களும், இதில் சேர்ந்திருக்கிறார்கள். சிலர் கக்ஷிப்பற்றற்றவர்கள். லைபர்க் ஒரு தொழிலாளி. பிரெஞ்சு உள்நாட்டுப் படையில் முதல் தலைவர். ஜெர்மனி படையெடுத்தபொழுது அவர் ஹோடல் டீவில்லாவைத் தற்காப்பு செய்தார்.

இதாலிய யுத்தப்போக்கு.

கெஸ்ஸல்ரிங்கின் சிரமங்கள்.

(டைம்ஸ் பத்திரிகை).

பிரான்ஸிலும் தாழ்ந்த நாடுகளிலும் ஜெர்மன் ஆதிக்கத்தை ஒழிக்கக்கூடிய ஏராளமான வெற்றிகள் நேசதேசத்தாருக்குக் கிடைத்திருப்பதால் இதாலியில் சேனைகள் முரட்டுத்தனமாக முக்கியமான போரை நடத்துவதை நாம் மறந்துவிடக்கூடாது.

மேற்கு முனையில் அரண்களை ரக்ஷிப்பதற்காக இதாலியிலுள்ள கெஸ்ஸல்ரிங்கின் படைகளுக்கு எவ்வித ஒத்தாசையையும் செய்ய ஹிட்லர் தயாராக இருக்கிறான். ஆனால் கெஸ்ஸல்ரிங், ஜெனரல் அலெக்ஸாண்டரின் குறடவளைப் பிடிப்பில் மாட்டிக்கொண்டிருக்கிறான். அவன் போரிலிருந்தும் விலகிக்கொள்ள துணியமாட்டான். அவ்விதம் செய்தால் ஜெர்மனி பேரில் படையெடுக்க மற்றொரு மார்க்கம் திறக்கப்பட்டுவிடும். அவன் எட்ரஸ்கன், அபினைன் மலைகளில் உள்ள அரண்களில் சமாளித்து நின்று நேசதேசத்தாரின் திட்டத்தை சிறிதுகாலம் ஒத்திவைக்க முயற்சிப்பான். பிரான்ஸில் இவ்வித நடவடிக்கை கையாளப்பட்டபொழுது படையெடுப்பைத் தடுக்க உபயோகப்படக்கூடிய எதிரியின் சேனைகள் பெருவாரியாக அழிந்தன என்று நாம் அறிவோம்.

கெஸ்ஸல்ரிங்கின் படைகளை நிர்மூலமாக்குவதுதான் வெற்றிக்கு பெரிய அறிகுறியாகும். அநேக மாதங்களாக நடைபெற்ற கடும்போரிலிருந்து இது சுலபமானதல்ல என்று புலப்பட்டுவிட்டது. கோதிக் அரணில் போர் சாவதானமாக நடைபெற்றபோதிலும், அதிலிருந்து நேசதேசத்தாருக்கு யுத்த முறையில் அதிக லாபங்கள் உண்டாகியிருக்கின்றன. இதாலியில் உள்ள படைகளுக்கு சர்ப்பராக்களையும், வெடிமருந்துகளையும் ஜெர்மனியிலிருந்து கெஸ்ஸல்ரிங் ஏராளமாக கொண்டுவருகிறான். இதாலியில் நேசதேசப்படைகள் முன்னேறிவிட்டதால மத்தியதரைக்கடலிலிருந்த விமானப் படைகளுக்கு புதிய தளங்கள் கிடைத்துவிட்டன. அவைகளும் ருஷ்யாவும் சேர்ந்து டான்யூப் நதிப்பிரதேசத்திலுள்ள எதிரியின் எண்ணெய் சப்ளை நிலயங்களை அழித்துவிட்டன. பால்கன் நாடுகளையும் அவைகள் விடுவித்தன. எட்ரியாடிக் கடலின் உச்சிக்குப் படைகள் முன்னேறுவதால் அவைகள் யூகோஸ்லாவ் பல்கேரிய எல்லையில் ருஷ்யர்களுடன் தொடர்பு கொண்டிருக்கும் மார்ஷல் டிடோவுடன் சேர்ந்துகொள்ள வசதியும் உண்டாகிவிடும். ஜெர்மனியைச்சுற்றி ஆண்ட்வர்ப்பிலிருந்து கோனிக்ஸ்பர்க் வரையிலும் உள்ள வளையமும் நெருங்கிவருகிறது.

போ நதி சமவெளியில் பின்புறத்திற்கு கெஸ்ஸல்ரிங் துரத்தி அடிக்கப்பட்டால் தெற்கு ஐரோப்பாவிலுள்ள ஜெர்மனியின் கேந்திர ஸ்தானங்களுக்கு அபாயம் ஏற்பட்டுவிடும். ஆகையால் ஒவ்வொரு குன்றுகவும் டாட் சங்கத்தார் அமைத்திருக்கும் ஒவ்வொரு தற்காப்பு பெட்டியிலிருந்தும் அவன் சோர்வன்னியில் உருக்கமாகப் போர்புரிகிறான். அவனை எதிர்த்து மிகுதியான படைகளும், உயர்வான முஸ்திப்புகளும், வீரர்களும் போர்புரிகிறார்கள். கோதிக் அரணை பக்கத்திலிருந்து தாக்கிவருகிறார்கள். இவ்விரண்டும் சேர்ந்து எதிரி எவ்வளவு பலமாகப் போராடினாலும் அவனை முறியடித்துவிடும். மத்தியில் ஐந்தாம் படை பொலோனு என்னும் நகரத்துக்குச் செல்லக்கூடிய மலைவழியாக அரணை நோக்கிச் செல்கிறது. எட்டாம் படை எட்ரியாடிக் கடற்கரை ஓரமாக முன்னேறுகிறது. அது மலைகளின் வலது பக்கத்துக்கு வந்துவிட்டது. இங்கே மலைகள் தெற்குமுகமாக ஓடுகின்றன. கடலுக்கும், மலையடி வாரத்துக்கும் குறுகலான மார்க்கம்தான் இருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் எட்டாம்படை ரிமினி துறைமுகம் வரையில் முன்னேறிவிட்டால் அது எதிரியின் பின் பக்கத்தில் செல்லும் இருப்புப் பாதையின் கிழக்குக்கோடியை அடைந்துவிடும்.

தரைப்படை, ஆகாயப்படையின் ஒத்துழைப்பு.

நேசதேச வெற்றிக்கு முக்கிய காரணம்.

(டெயிலி டெலகிராப்).

மேற்கில் நேசதேச தரைப்படைகள் துரிதமாக முன்னேறிவருவதால் ஆங்கிலோ அமெரிக்க விமானப்படைகளின் சௌகரியத்தை நாம் மதிக்காமலிருக்க இயல்பு ஏற்படும். இவ்விதம் செய்வது நியாயமற்றதும் தவறான நடவடிக்கையுமாகும். ஜெர்மனி வெடி விமானங்கள் தாக்கியபொழுது நாம் தரைப்படைகளின் நடவடிக்கையை அலக்ஷியம் செய்யவில்லை.

மேலும் மேற்கில் படையெடுத்துவரும் படைகளுக்கு விமானப்படை சீப் மார்ஷல் டெட்டர்தான் உதவி உயர்தரத் தலைவர். அவரை அதிகாரத்துக்கு நியமித்ததிலிருந்து தரைப்படை, ஆகாயப்படையின் பூர்ணமான ஒத்துழைப்பு வெளிப்படுகிறது. இந்த ஒற்றுமை

தான் ஆபிரிக்காவிலும், டுனிஸியாவிலும், இப்பொழுது மேற்கு ஐரோப்பாவிலும் நமக்கு வெற்றிகளைக் கொடுத்தது. எதிரியின் தோல்விக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாகயிருந்தன.

தனிப்பட்ட கடற்படை, தரைப்படை, விமானப்படையின் உதவிகொண்டு பூர்ணமான வெற்றி பெறமுடியாதென்றும், அவைகளின் ஒத்துழைப்பு அவசியமென்றும் இந்த யுத்தத்தில் புலப்பட்டுவிட்டது. ஆகிலும் ஒவ்வொன்றின் சேவையையும் நாம் பாராட்டவேண்டியது தான். நேசப்படைகள் ஜெர்மன் எல்லையைத் தாண்டி வேகமாக முன்னேறும்பொழுது விமானப்படையும் அபாயகரமான நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறது. அது எதிரியைத் தாக்குவதற்கும், எதிரியின் தொழிற்சாலைகளை நொருக்குவதற்கும் பிரயோஜனப்படுகிறது. தரைப்படைகளுக்கு உதவி செய்யும் முறையில் படைகள் முன்னேறுவதற்கு முற்போக்காக கனமான வெடி விமானங்களை அனுப்பி சௌகரியமேற்படுத்துவதென்ற நடவடிக்கை சொல்ப லாபத்தைததான் தந்திருக்கிறது. கேயனுக்குக் கிழக்கில் நடைபெற்ற போரில் இந்த முறைதான் கையாளப்பட்டது. இதே விதமாகத்தான் ஜெர்மனி வசமுள்ள துறைமுகங்கள் தாக்கப்படுகின்றன. போர்முனைக்குப் பின்னணியிலுள்ள போக்குவரவு மார்க்கங்களைத் துண்டித்து எதிரிக்குப் பின்வாங்குவதில் சிரமங்களை உண்டாக்குவதில் விமானப்படையின் சேவை சிலாக்கியமானது. ஆகஸ்டு மாதம் இரண்டாம் வாரத்தில் 900 எஞ்சின்கள் அழிக்கப் பட்டதாலும், ரஸ்தாக்கள் ஜெர்மன் சாமான் வண்டிகளுக்குப் புதைகுழியாகச் செய்யப் பட்டதாலும் தான் நேசதேசத்தாரின் துரிதமான முன்னேற்றத்துக்கு சௌகரியம் ஏற்பட்டது.

சேனைகளுக்கு உதவியும், எதிரிகளைத் தாக்கும் நடவடிக்கைகளும் சில சமயங்களில் ஒன்றுபட்டுவிடும். விமானங்கள் போர்முனைகளைத் துணித்துவிடுவதின்மூலம் உதவிப் பொருள்களும், படைகளும் குறிப்பிட்ட போர்முனைக்கு வரவொட்டாமல் தடைபட்டன. பின்வாங்கும் படைகள் அழிக்கப்பட்டன. எதிரி முக்கியமான மூலப்படைகளையும் ஸீக் பிரட் அரணுக்குக் கொண்டுபோகமுடியாமல் தடுக்கப்பட்டுவிட்டான். மேலும் விடுதலை பெற்ற நாடுகளில் புதிய விமான தளங்களைத் துரிதமாக அமைத்துவிடுவதால் விமான நடவடிக்கை பலப்படுகிறது. ஜெர்மனியில் உள்நாட்டில் குழப்பம் ஏற்பட ஹேதுவாகயிருக்கிறது.

கடைசியாக ஒவ்வொரு போர்முனையிலும் விமான உதவி மிகுதியாக ஏற்படக்கூடும். எதிரியின் போக்குவரத்துகளும், யுத்த தளவாட உற்பத்திசாலைகளும் பலமாக அழிக்கப்படுகின்றன. இந்த மகத்தான நடவடிக்கையையும் நாம் அலக்ஷியம் செய்பக்கூடாது.

பிரிடிஷ் யுத்தக் கப்பல்களிலுள்ள பீரங்கிகளின் பிரயோக சக்தி.

ஒரு டன் குண்டுகளை 20 மைல் தூரத்திற்கு அனுப்புகின்றன.

W. F. ஹார்டின்.

(டெயிலி மெயிலின் கடற்படை நிருபர்).

வார்ஸ்பைட் என்ற பிரிடிஷ் யுத்தக்கப்பல் 17 மைல்களுக்கு அப்பாலிலுள்ள நார்மண்டியிலுள்ள கிராமத்திலிருந்த ஜெர்மன் துருப்பு சேமிப்புகள் பேரில் பீரங்கிப் பிரயோகம்செய்ததென்பது கடற்படை பீரங்கி நடவடிக்கையில் நம்பத்தகாததாகத் தோன்றும்.

தூரம் செல்லுவதைவிட குண்டுகள் குறிப்பாக லக்ஷியத்தைத் தாக்குவதுதான் குறிப்பிடத்தக்கது. யுத்தத்துக்குப் பின் கப்பற் பீரங்கிகள் 20 மைல்களுக்கப்பாலிலுள்ள ஒரு லக்ஷியத்தைத் தாக்கக்கூடுமென்று பரிக்ஷை செய்து முடிவு செய்யப்பட்டது. பீரங்கியாளருக்கு லக்ஷியம் கண்ணுக்குப் புலப்படவில்லை. அப்படிப் புலப்பட்டிருந்தாலும் துப்பாக்கிப் பயிற்சியில் அமைக்கப்பட்டிருக்கும் லக்ஷியத்தைப் போல் அது சிறியதாகத் தான் தோன்றும். 100 டன்கள் கனமுள்ள பீரங்கிகள் 1 டன் கனமுள்ள குண்டுகளை லக்ஷியத்தின் பேரில் குறி தவறுமல் எப்படி அடிக்கக்கூடும்.

இது விஷயத்தில் வருஷத்தில் இரண்டு நாட்களிலாவது காற்று ஒரே திசையை நோக்கியும் ஒரே வேகத்துடனும் அடிப்பதில்லை என்பதை நாம் அறிய வேண்டும். சீதோஷ்ண

ஸ்திதியும் ஒவ்வொரு நிமிஷமும் மாறிக்கொண்டே யிருக்கிறது. பாரமானியிலும் அடிக்கடி மாறுதல்கள் காணப்படுகின்றன. இந்த மாறுதல்களுக்குப்பின் போக்கை பாதிக்கக்கூடும். இவைகள் அற்பமாகத் தோன்றலாம். ஆனால் சீதோஷ்ண ஸ்திதியில் சிறிது மாறுதல்கள் ஏற்படலாம். பாரமானியில் ஒரு சிறிது குறைவு ஏற்பட்டாலும் குண்டு செல்லும் தூரத்தில் 1,000 கெஜம் குறைவுபட்டுவிடும்.

இவைகளை எல்லாம் சமாளிப்பதற்காக, ஜோதிட சாஸ்திர கணித கால அட்டவணையைப் போல, 30 வருடங்களாக பீரங்கிப் பிரயோக சாஸ்திரத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பீரங்கி அடிக்கும் தூரத்தில் ஒத்திகையாலும், தவறுதலாலும் அநேகர் அனுபவம் பெற்றுவிட்டார்கள். ஆகையால் பிரிடிஷ் கடற்படை பீரங்கி இலாகாவில் ஆயிரக்கணக்கான ஆராய்ச்சி விஞ்ஞான சாஸ்திரிகளின் அனுபவமும், அட்டவணைகளைத் தயாரிக்கச் செலவிடப்பட்ட லக்ஷக்கணக்கான பொருளின் பிரயோஜனமும் பிரதிபலித்து வருகின்றன.

26,700 கெஜ தூரத்திலுள்ள ஒரு லக்ஷியத்தை 178 டிகிரி சாய்விலிருந்து அடிக்கும்படி ஒரு பீரங்கிப் படைக்கு உத்திரவிட்டால் கடல் சீதோஷ்ண ஸ்திதி எவ்விதமிருப்பினும் பீரங்கிகள் குறிதவறாமல் அடித்துவிடும். அவனிடம் உள்ள அட்டவணைகள் மூலம் சற்று வேகத்துக்குத் தக்கவாறு எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்ற அறிவு அவனுக்கு ஏற்பட்டுவிடும். அதன்படி பீரங்கிப் படைகள் அனுஷ்டித்து பீரங்கிகளை அமைத்துக் கொள்ளுவார்கள்.

பீரங்கிகளை டிரெக்டர் லேயர் என்ற ஒருவர்தான் பிரயோகிப்பார். ஒரு பெடலை மிதிப்பதின்மூலம் எல்லா பீரங்கிகளும் குண்டுகளை அனுப்பிவிடும். பெடலை அழுத்தியவுடன் மின்சார ஓட்டம் ஏற்படும். உடன் காலத்தில் பீரங்கிகள் சுடாது. கப்பல் போய்க்கொண்டேயிருந்தால் கணக்குகள் தவறிவிடும். டிரெக்டர் லேயர் மின்சாரத்தைப் பூட்டிவிட்டாலும் மற்றொரு மின்சார அமைப்புத்தான் பீரங்கிகளைச் சுடச்செய்யும்.

கப்பல் வேகமாகப் போய்க்கொண்டிருக்கும்பொழுதும் அசைந்துசெல்லும் லக்ஷியத்தை அடிக்கும் பொழுதும் எதிரியின் வேகத்தையும் திசையையும் கண்டுபிடிக்க வேறு கருவிகள் அமைக்கப்பட்டிருப்பதால் அவைகள் உடன் காலத்தில் பீரங்கிப் படைகளுக்குத் தகவல்களை அறிவித்துவிடும்.

இந்த யுத்தத்தில் பிரிடிஷ் நேசதேசக் கப்பல்களுக்கு எதிரியின் கப்பல்களைத் தாக்க சந்தர்ப்பம் ஏற்படாதபோதிலும் அவைகள் எதிரியின் கடற் கரையிலுள்ள லக்ஷியங்களைப் பலமாகத் தாக்கி கீர்த்திபெற்றுவிட்டன.

புதிய கப்பல்கள், புதிய முறைகள், புதிய தந்திரங்கள்.

யூ படகுகளை பிரிடிஷ் கடற்படை முறியடித்த வகை.

(லெப்டினண்ட் செட்ரிக் டே).

புதிய ரகக் கப்பல்கள், புதிய ஆயுதங்கள், புதிய யுத்த தந்திரங்கள், போர் புரியக்கூடிய ஐதிகம் முதலிய உதவிகளைக்கொண்டு பிரிடிஷ் கடற்படை ஐந்து வருஷங்களாக அதன் கடலாதிக்கத்துக்கு ஏற்பட்ட மகத்தான சவாலை சமாளித்து வந்துள்ளது. கடற்படையின் சரித்திரத்தில் அநேக நெருக்கடியான சமயங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த யுத்தத்தைப்போல் எந்த யுத்தத்திலும் விஞ்ஞான சாஸ்திரமும், புதிய நோக்கங்களும், புத்தி சக்தியும் பிராபல்யத்துடன் வேலை செய்யவில்லை. 1939-ம் வருஷத்துக்குப்பின் பிரிடிஷ் கடற் படை அநேக முறைகளில் மாறுதல்கள் அடைந்திருக்கிறது. அபிவிருத்தியும் அடைந்திருக்கிறது. அதன் வெற்றிக்கு இவைதான முக்கிய காரணங்கள்.

யுத்தம் ஆரம்பித்தபொழுது பிரிடிஷ் கடற்படையில் 133,000 வேலைக்காரர்களிருந்தார்கள். ஆரம்பத்திலிருந்ததைவிட ஐந்து மடங்கு வேலைக்காரர்கள் கப்பற்படையிலிருக்கிறார்களென்று 1942-ம் வருஷத்தில் உதவி கடற் தளபதி ஸர். வில்லியம் வேக் வாகர் ரிபோர்ட்டை அனுப்பினர். 1942-ம் வருஷ முடிவில் கப்பல்களில் 665,000 வேலைக்காரர்களும் கடற்படையில் ஆயிரக்கணக்கானவர்களும் இருக்கிறார்கள். இந்தத் தொகை இப்பொழுது அதிகரித்திருக்கும்.

துணைக்காவல் கப்பல்கள்.

யுத்த ஆரம்பத்திலும் வெகு நாட்கள் வரையிலும் துணைக்காவல் கப்பல்கள் அதிகமாக தேவைப்பட்டன. பிரிடிஷ் சாம்ராஜ்ய கடற்படையில் 1939-ம் வருஷத்தில் எல்லா ரகங்களும் சேர்ந்து 327 கப்பல்களிருந்தன. 87 கட்டப்பட்டுவந்தன. இது போதவில்லை. 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் முடிவில் 480 கப்பல்கள் கட்டப்பட்டிருந்தன. 1942-ம் வருஷம் அக்டோபர் மாதம் நஷ்டமடைந்த யுத்தக் கப்பல்கள் ஈடு செய்யப்பட்டிருந்தன. அதிகமான நாசகாரிகள் கட்டி முடித்தாகிவிட்டது. நூற்றுக்கணக்கான படைகளை இறக்கும் படகு களும், 200 கார் வெட்டிகளும் மிதக்கவிடப்பட்டிருந்தன. 1943-ல் 170 பெரிய கப்பல்கள் கட்டி முடிந்தன. 2000-க்கு மேற்பட்ட கப்பல்கள் மிதக்கவிடப்பட்டிருந்தன. மொத்தமாக 2,000 கப்பல்கள் மிதக்கவிடப்பட்டிருந்தன.

கடற் படையின் வலிமை இவ்விதமாக அதிகரித்துவந்தது யுத்த ஆரம்பத்திலிருந்து யுத்தத்தைப் பாதிக்கக்கூடியது அட்லாண்டிக் கடல் மார்க்கம் தான். அது துண்டிக்கப் பட்டுவிட்டால் பிரிடன் தோல்வியடையும்படி நேரிடும், அல்லது சமாதானத்தைக் கோர வேண்டி இருந்திருக்கும். மேலும் அட்லாண்டிக்கில் தோல்வியுற்றால் நேசதேசத்தார்கள் மத்தியதரைக் கடலிலும், பிரான்ஸிலும் வெற்றிகரமாக நடவடிக்கைகளைத் துவக்கியிருக்க முடியாது. யூ படகுகளின் மிகுதியாலும், அவைகளின் நவீன அமைப்பினாலும் அதிக அபாய மும் ஏற்பட்டிருந்தது.

கார் வெட்டிகளும் சிறிய போர்க் கப்பல்களும்.

அட்லாண்டிக் போர் வலுத்துவிட்டதால் யூ படகுகளை அழிக்க புதுரகக் கப்பல்களைக் கட்டவேண்டுமென்று பிரிடிஷ் படை இலாகா முடிவு செய்தது. யுத்த ஆரம்பத்தில் பிரிடன் கட்டிய சிறிய வேட்டை நாசகாரிகள் முதல் தரமான துணைக்காவல் கப்பல்களாக இருந்தன. ஆகிலும், சாமான் கப்பல் கூட்டங்களை யூ படகுகளின் தாக்குதலினின்றும் காப்பாற்ற புதிய ரகக் கப்பல்களான கார் வெட்டிகள் கட்டப்பட்டன. அதன் பிறகு சிறிய போர்க் கப்பல் கள் கட்டப்பட்டன. 'இவ்விரு வகைக் கப்பல்களும் எதிரிநீர்மூழ்கிகளை வேட்டையாட வேண்டுமே ஒழிய தற்காப்பு யுத்தம் செய்வதற்கில்லை.

யூ படகுப் போரில் ஜெர்மானியர்கள் ஆரம்பம் முதல் விமானங்களை உபயோகித்து வந் தார்கள். பிரிடிஷ் கடற் படையும் இதைச் சமாளிக்க விமானங்களையும் உபயோகித்து வந்தது. ஆகிலும் அவைகளைக்கொண்டுபோக போதுமான விமானந்தாங்கிக் கப்பல்கள் கிடையாது. ஒரு சமயத்தில் விமானங்கள் கப்பலிலிருந்து அனுப்பப்பட்டன. அவைகளுக்கு தரையில் இறங்கும் இடங்களும் கிடையாது. முக்கியமாக வடக்கு ருஷ்யப் பாதையில் அவைகள் கடலில் மூழ்கி அமுங்க வேண்டியதுதான்.

கடற்கரை விமானப் படையுடன் ஒத்துழைக்கும் முறைகள் அபிவிருத்தி செய்யப் பட்டன. வெகு தூரம் செல்லும் விமான நடவடிக்கை மூலம் யூ படகுகளின் அட்டகாசம் பலமாகத் தடுக்கப்பட்டது. ஆகிலும் தரையிலிருந்து புறப்படும் விமானங்கள் எட்டக் கூடாத சில திறப்புகள் அட்லாண்டிக்கில் இருந்தன. இதன் பிறகுதான் விமானந் தாங்கி கப்பல்கள் கட்டப்பட்டு அவைகள் அட்லாண்டிக்கின் குறுக்கே செல்லும் சாமான்களுக்கு துணைக் காவல் புரிந்தன.

ஆரம்பத்தில் சாமான் கப்பல்கள் விமானந் தாங்கிகளாக திருத்தியமைக்கப்பட்டன. பிறகு புதிய கப்பல்களே கட்டப்பட்டன. அவைகளும் கப்பல்களும் ஒன்றுபட்டு அட்லாண் டிக் போரை நடத்தின.

மற்றொரு முன்னேற்றம்.

யூ படகுகளுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதென்று அவைகள் அறிந்தன. பிரிடனின் புதிய ஆயுதங்களைப்பற்றிய விவரங்களை இப்பொழுது வெளியிட முடியாது. ஆனால் யூ படகுகளை நாம் வெற்றிகரமாக முறியடித்ததிலிருந்து பிரிடிஷ் கடற்படை ஜெர்மனியின் கடற்படையைவிட வலு மிகுந்ததவென்பது நிச்சயம். ஆஸ்டிக், ராடார் என்ற கருவிகளின் அமைப்பு அற்புதமானது. யூ படகுகளை அழிப்பதில் அவைகள்தான் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டன.

பீரங்கி அமைப்பிலும் விசேஷ முன்னேற்றம் ஏற்பட்டது. கடற்படை பீரங்கிகள் அநேக யூ படகுகளை குண்டு வீச்சு மூலம் நொருக்கி யிருக்கின்றன. பிரிடிஷ் யுத்தக் கப்பல்களின் பீரங்கிப் பிரயோகம் எந்த சமயத்திலும் குறி தவராதது. இதுவும் அகஸ்மாத்தாக ஏற்படுவதில்லை. அவைகளின் திறமையினால் இந்த யுத்தத்தில் 500-க்கு மேற்பட்ட யூ படகுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் கடற்படை மற்ற மகத்தான அலுவல்களையும் சாமர்த்தியமாகவும், தந்திரமாகவும், சமயோஜிதமாகவும் நடத்தியிருக்கின்றன. இருவகைப் பட்ட நடவடிக்கைகளில் 60 ரகமுள்ள படைகளை இறக்கும் படகுகள் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன.

இந்த புதிய படகுகளைக் கட்டுவதில் பிரிடிஷ் அமெரிக்க கடற்படைகள் ஒத்துழைத்தன. அந்த முயற்சிகளின் பயன்கள் மத்தியதரைக்கடலிலும், பஸிபிக்கிலும், இங்கிலீஷ் கால்வாயிலும் வெளிவந்தன.

விமானந் தாங்கிக் கப்பல்கள்.

யுத்த ஆரம்பத்தில் இவைகள் குறைவாக இருந்தன. இப்பொழுது அவை அதிகரித்து விட்டன. கடற்படையும் கடற் கரை விமானப் படையும் பிரிடிஷ் விமானப் படையும் ஒத்துழைத்ததினால் அட்லாண்டிக்கிலும் பிரிடனுக்கு சமீபத்திலுள்ள சமுத்திரங்களிலும், மத்தியதரைக் கடலிலும், தூரக்கிழக்கிலும் அநேக வெற்றிகள் கிடைத்தன.

இந்த ஒற்றுமையிலிருந்து அநேக பிரச்னைகளும் கிளம்பின. யுத்தக் கப்பல்கள் எதிரியின் கடற்கரை ஓரங்களுக்கு அபாயம் உண்டுபண்ணி கடலாதிக்கத்தை அதிகரித்து விட்டன. அவ்விதம் அவைகளை உபயோகப்படுத்த விமான ரக்ஷணையும் அவசியமென்று ஏற்பட்டு விட்டது.

விமானப் படை வலிமையினால் கடற் பலம் ஒழிந்துவிடுமென்று சிலர் அபிப்பிராயப் பட்டார்கள். ஐந்து வருஷ யுத்தத்தில் இதற்கு மாறான அனுபவம் ஏற்பட்டுவிட்டது.

இவை இரண்டும் ஒன்றுபட்டால் அதிக வலிமை உண்டாகிவிடுமென்று கடல் போரை நடத்தும் இரு தரப்பாரும் இந்த ஒற்றுமை அன்னியில் வெற்றி பெற முடியாதென்றும் ருஜுவாகிவிட்டது.

தென்கிழக்கு இங்கிலாந்தில் எதிரியின் பீரங்கிப் பிரயோகம்.

டோவரில் ஒரு நாள்.

(நியூஸ் கிரானிகிள் நிருபர்).

பிரிடிஷ் மக்களிடையே எவருக்கும் தீரத்துக்காகப் புகழுரை செய்யவேண்டுமானால் தென் கிழக்குக் கடற்கரையிலுள்ள ஜனங்களுக்குத் தான் இது உரித்ததாகும்.

ஐந்து வருஷங்களாக இடைவிடாத பலமான விமானத் தாக்குதலும், தனிப்பட்ட சில விமானங்களின் திருட்டுத் தனமான நடவடிக்கையும், யந்திர பீரங்கிப் பிரயோகமும், பறக்கும் வெடி குண்டு வீச்சும், கடற்கரை பீரங்கிப் பிரயோகமும் பிரிடனில் நடைபெற்றன. சென்ற இரண்டு வாரங்களில் தென்கிழக்கு கடற்கரையிலுள்ள ஜனங்கள் போர் முனை சிரமங்களை அனுபவித்திருக்கிறார்கள். அவர்களுடன் நான் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தேன். அப்பொழுது பகலிரவாக நூற்றுக்கணக்கான ஜெர்மன் பீரங்கிக் குண்டுகள் கடலுக்குள் விழுந்தன. 20 மைல்களுக்கப்பாலிலுள்ள ஜெர்மானியர்கள், தங்களுடைய வெடி மருந்து சேமிப்பிலுள்ள எல்லாவற்றையும் பீரங்கிகளில் உபயோகித்து டங்கர்க்குக் குப்பின் மனம் கலங்காமல் ஜெர்மனியை எதிர்த்துப் போராடி வந்திருக்கும் ஜனங்களை அழிக்க கடைசியான ஒரு பிரயத்னத்தைச் செய்துவருகிறார்கள்.

குண்டு வீச்சுக்குட்பட்ட நகரங்களின் வரலாறு பின்வருமாறு.

டோவரில் காலை வேளை. வெடிகுண்டுகளுக்குத் தப்பிய கடைகள் திறக்கப்படுகின்றன. அபாயச் சங்கு இருமுறை ஒலிக்குமுன் தங்களுடைய உணவுப் பொருள்களைப்பெற ஸ்திரீகள் வேகமாகச் செல்லுகிறார்கள்.

திடீரென்று குண்டுகள் வெடிப்பதின் இடிமுழக்கமும் சப்தமும் கேட்கிறது. மூன்று, நான்கு, ஆறு வெடி குண்டுகள் ஒரே சமயத்தில் இந்த பிராந்தியத்தில் விழுகின்றன. குண்டுகள் வருகின்றனவென்று ஒருவரும் சொல்லக்கூடவில்லை. பீரங்கிகளில் ஏற்படும் வெளிச்சத்தை மூடுபனி காரணமாக மலைகளிலுள்ள உற்று நோக்காளர்கள் கண்டுபிடிக்க முடியவில்லை.

தெருக்கள் துரிதமாக சுத்தி செய்யப்படுகின்றன. ஸ்திரீகளும், குழந்தைகளும் மலைகளிலுள்ள ஒளிகளுக்குச் செல்லுகிறார்கள். மற்றவர்கள் பூமிக்குள் அமைக்கப்பட்டிருக்கும் ஒளிகளுக்குள் மறைந்து விடுகிறார்கள். அநேகர் வீடுகளுக்குள் புகுந்துவிடுகிறார்கள்.

இப்படி ஒரு மணி வரையில் தான் மறைந்திருக்கிறார்களென்பதில்லை. ஒரே மூச்சில் குண்டு வீச்சு, 10, 11, 12 மணிகள் வரையில் தொடர்ச்சியாக நடைபெறுகிறது. இடைவெளியில் ஜனங்கள் கடைகளுக்குச் செல்லுகிறார்கள். சிலர் மோட்டாரில் செல்ல முயலுகிறார்கள். இன்னும் சிலர் படக்காக்ஷிக்குச் செல்ல பிரயத்தனம் செய்கிறார்கள்.

மலையிலுள்ள ஒளிகளுக்குச் செல்லும் ஜனங்கள் அங்கே பத்திரமாக இருந்து ஒழுங்கான வாழ்க்கையையும் நடத்திவருகிறார்கள். உத்தியோக முறையில் அனுப்பப்பட்ட போதனையின் பிரகாரம் அவர்கள் 24 மணிகளுக்குப் போதுமான ஆகாரத்தை எடுத்துச் செல்லுகிறார்கள். அநேகர்கள் கஷ்டப்படுகிறார்கள். குண்டு வீச்சேற்படும் பொழுது சில ஜனங்கள் சில அலுவல்களைச் செய்யவேண்டியிருக்கிறது. ரொட்டிவிற்கும் பெண் தன்னுடைய வியாபாரத்தை நடத்த அங்குமிங்கும் நடமாடுகிறாள்.

ஹைட்ரோஜனை உண்டாக்கும் தொழிற்சாலைகளை கட்டுப்பாடு செய்வது.

ஜெர்மன் அக்கிரமப் போரை நிறுத்த திட்டம்.

இன்று வெளிவந்த "யுத்தத்தின் நியாயமான முறை" என்ற புத்தகத்தில் பாம்பர் படையில் சேனாதிபதியான விமானப்படை சீப் மார்ஷல் ஸர் ஆர்தர் ஹாரிஸின் சகோதரரான, மர்ரே ஹாரிஸ், ஜெர்மனியை நீண்டகாலம் வரை ஆக்கிரமணம் செய்வதை ஆதரிக்கவில்லை. சமாதானத்தை நிலைநாட்ட தொழில்முறையை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று அவர் யோசனை சொல்லுகிறார்.

"நெட்ரேட், ஹைட்ரோஜன் முதலியவற்றை உற்பத்தி செய்யும் யுத்த முயற்சிக்குரிய முக்கியமான தொழிற்சாலைகளைக் கட்டுப்பாடு செய்வதின்மூலம் எதிரிகளை நிராயுதபாணிகளாக்கிவிடவேண்டும். யுத்தத்திற்கு நெட்ரோஜனும், ஹைட்ரோஜனும் அத்தியாவசியமானவை. அநேக வெடிமருந்துகளுக்கு நெட்ரோஜன் முக்கியமான பொருள். வெடிமருந்துக்காக நெட்ரோஜனை அமைப்பதற்கும், சேர்க்கைக் காரலோனை உண்டுபண்ணுவதற்கும் ஹைட்ரோஜன் அவசியமானது. நெட்ரோஜனும், ஹைட்ரோஜனும் இல்லாவிட்டால் போரிலீடுபட்டவர்கள்கைகளால்தான் போர் புரியவேண்டும். இந்த பதார்த்தங்கள் தாராளமாக சப்ளை செய்யப்பட்டால்தான் யுத்தம் தொடர்ச்சியாக நடைபெறும்.

நெட்ரோஜனை உற்பத்திசெய்யும் சாதனங்களை அழிப்பதினாலும், சேர்க்கை சாதனங்களை தடை செய்வதினாலும் உணவுப்பொருள் உற்பத்தி பாதிக்கப்பட மாட்டாது. எதிரிக்கும் அதிக கஷ்டம் ஏற்படாது.

மேலும் ஹைட்ரோஜன் உற்ப்த்தி செய்யும் சாதனங்களையும் ஒழித்துவிடவேண்டும். ஏனெனில் அவைகளை நெட்ரோஜன் உற்பத்தி செய்வதற்குச் சுலபமாக உபயோகப்படுத்திவிடக்கூடும். ஜெர்மன் ராணுவ சக்தி பூராவும் தலைகீழாக உள்ள கோபுரத்துக்குச் சமானமானது. அதன் கூர்மையான பாகம் ஊசிமுனைபோன்ற ஹைட்ரோஜனை ஆதாரமாகக் கொண்டது."

ஜெர்மனியின் V-4 ஆயுதம் முறியடிக்கப்பட்டது.

வெடிகளுள்ள மோட்டார் படகு.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

இப்பொழுது முறியடிக்கப்பட்ட ஜெர்மன் V-4 ஆயுதம் நார்மண்டி கரையில் படையெடுப்புகளைத் தாக்க ஏராளமாக உபயோகிக்கப்பட்ட வெடிகளுள்ள மோட்டார் படகாகும்.

100 மோட்டார் படகுகளும், ஒருவர் நடத்தும் மீன்வெடிகள் என்ற V-3 ஆயுதமும் அழிக்கப்பட்டுவிட்டன. V-4 என்னும் உயர்தர வேகமுள்ள மோட்டார் படகில் ஏராளமான வெடி குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. நங்கூரம் பாய்ச்சியிருந்த நமது 300, 400 கப்பல் செல்லும் மார்க்கத்தை மாலுமிகள் நிர்த்தாரணம் செய்தார்கள். அப்பொழுது ரப்பர் படகுகளில் குதித்து ஜெர்மானியர்கள் ஓடிவிட்டார்கள்.

படைகளை இறக்குவதும் ஸப்ளைகளை அனுப்புவதுமான வேலையை நடத்திய நேசதேச கடற்கரை உயர்தர சேனாதிபதியான கடற்தளபதி ஸர் ஸர்ட்ராம்ராம்ஸே 90 நாட்கள் திட்டத்தை நிறுவினர். D-தினத்தன்றும் அதற்குப்பின் 28 நாட்கள் வரையிலும் கடற்படைகள் 1 லக்ஷம் ஜனங்களையும், 1,83,500 வண்டிகளையும், 6,50,000 டன்கள் எடைமானமுள்ள சாமான்களையும் இறக்கின. ஒருவனுக்கு அரை டன் சாமானும் ஐந்து பேர்களுக்கு ஒரு வண்டி வீதமாகவும் இறக்கப்பட்டன. இந்த நடவடிக்கையில் 5,143 கப்பல்கள் ஈடுபட்டன. அவைகளில் 4,266 படைகளை இறக்கக் குறிப்பாகக் கட்டப்பட்டவைகள்.

திட்டப்படி பிரிடிஷ் பகுதியில் தளவாடங்கள் குவிந்துவிட்டன. அதன் மொத்தம் எவ்வளவு என்பது ரகசியமானது. ஆகிலும் சென்ற யுத்தத்தில் பிரான்ஸுக்கு அனுப்பியதை விட இப்பொழுது 90 நாட்களுக்குள் பிரான்ஸில் ஏராளமான சாமான்களை குவித்திருக்கிறோம்.

ஜப்பானியக் கப்பல்களின்மேல் தாக்குதல்.

சிறிது சிறிதாய் அழிக்கும் சண்டை.

(டைம்ஸ் பத்திரிகை).

இந்துமஹாசமுத்திரத்திலிருந்தும், தென்மேற்கு பஸிபிக்கிலிருந்தும், ஜப்பானியர்களை விமானங்கள் மூலமும், கப்பல்கள் மூலமும் பெருந்தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

அமெரிக்க விமானங்கள். தென்மேற்கு பஸிபிக்கில் டச்சு, ஆஸ்திரேலியா, படைகளின் உதவியைக்கொண்டும், அமெரிக்க ஸப்மரீன்களின். பேருதவியாலும் இந்த சிதைவுறுத்தும் சண்டையை நடத்துகின்றது. ஜெனரல் மாக் ஆர்தரின் ஆஸ்திரேலிய தலைமைக் காரியாலயத்திலிருந்து அன்றாடம் எதிரிகளின் வியாபாரக் கப்பல்களுக்கு நாசம் ஏற்படுவதைத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விதமாக சென்ற 15 நாட்களில், 10 கப்பல்கள் ஸெலிபஸ்ஸிலுள்ள மெனுண்டோ என்னும் துறையில் நாசமாக்கப்பட்டும், இன்னும் பல கப்பல்கள் நேசதேச விமான தாக்குதல்களால் நாசமாக்கப்பட்டும், உள. அமெரிக்க ஸப்மரீன் தலைவர்களின் குறிப்புகளும் எதிரிகளின் கப்பல் சேதம் அன்றாடம் அதிகப்பட்டுவருவதைக் குறிக்கிறது. சென்ற வருஷம் ஜூன்மீ 30-ந்தேதியோடு முடிவடைந்த 3 மாதங்களில், அமெரிக்க ஸப்மரீன்கள் 10 யுத்தக் கப்பல்களையும், 24 வியாபாரக் கப்பல்களையும் நாசமாக்கியது. இந்த வருஷத்தில் அதே மாதங்களில் 7 யுத்தக்கப்பல்களும் 70 வியாபாரக் கப்பல்களும் நாசமாக்கப்பட்டன. அவைகள், டாங்கர்கள் போக்குவரத்துக் கப்பல்கள், பிரயாணிகள் நிறைந்த கப்பல்கள், ஆகிய இவைகளைச் சேர்ந்தவைகளே. அவர்களின் கடைசியான ரிபோர்ட்டில் 17 கப்பல்கள் சேதத்தைக் குறிப்பிட்டுள்ள இம்முயற்சிகளுக்கு பிரிடிஷ் ஸப்மரீன்கள் உதவியாய் இருந்து ஜப்பானியக் கப்பல்களை சிங்கப்பூர் முதலான ஊர் வரை பெருந்தாக்காய் தாக்கியுள்ளன.

1936 முதல் ஜப்பானியக் கடற்படைகளேயும் ஜப்பானியர்கள் அல்லாதார் எவ்வளவு அறிந்துள்ளார்களோ அவ்வளவே ஜப்பானியர்களும் தங்கள் வியாபாரக் கப்பல்கள் சேத மடைந்தவைகளே மீட்க அறிந்துள்ளார்கள். அன்னியில் ஜப்பானியக் கப்பல்களின் சிதைவு நாளுக்குநாள் அதிகமாகின்றது. ஜப்பானிய அரசாங்கத்தார் சிந்திக்கும் நிலேயில் இந்த நஷ்டம் கொண்டுவந்துவிட்டுள்ளது.

அதில் ஒன்ருவது அந்த அரசாங்கத்தின் சார்பில் பேசுபவன் தன் பிரசாரத்தில், ஜாவா, இதுபோன்ற இதர தீவுகளிலிருந்து கொள்ளேயடிக்க ஹேதுவில்லாமல் போனதினுல் ஜப்பானே திரும்ப பலப்படுத்தமுடியாமை காரணம் கப்பலின்மையேயாகும் என்று குறிப்பிடுவதாகும். இரண்டாவது ஆக்கிரமத்த கப்பல் தளங்களில் சிறிய மரத்தாலான அவைகளே கட்டியதாகும். இதே வரிசையில், அதிகமாய் கப்பல்கள் கட்டியதையும் வைத்து எண்ணவேண்டியதுதான். இந்தக் கப்பல்களும் எவ்வித தாக்குதல்களேயும் எதிர்க்கமுடியாது.

இந்த சிதைவை, யுத்தக் கப்பல்கள் வியாபாரக்கப்பல்கள் சிறிது சிறிதாய், நெருப்பாலோ அல்லது பஞ்சத்தாலோ நாசமாக்கப்பட்டது என்று அவர்களே ஒப்புக்கொள்ளுகிருர்கள். ஆனுல் பர்மாவில் உள்ள ஜப்பானியத் துருப்புகளே இங்கு கொண்டுவரமுடிந்தால் அதுபற்றி ஜப்பானியத் தலேவர் சந்தோஷப்படுவார்.

ஜப்பானிய விமானப்படை எங்கே?

தென்மேற்கு பஸிபிக் யுத்தத்தின் மர்மம்.

(டைம்ஸ் பத்திரிகையின் ஆஸ்திரேலிய நிருபர்).

ஐரோப்பாவில் மகத்தான நடவடிக்கைகள் காணப்பட்டு தென்மேற்கு பஸிபிக் போரில் நமக்கு கவனக்குறைவு ஏற்பட்டிருப்பதால் ஜப்பானியக் கடற்படை எங்கு சென்றுவிட்டது என்பதை நாம் ஆராய்ச்சி செய்வோம்.

ஒரு வருஷத்துக்கு முன் தென் பஸிபிக்கில் ஓரோ விரிகுடாவில் நேசதேசத்தாரின் விமான எதிர்ப்பு நடைபெற்றது. அமெரிக்க லேட்னிங் விமானங்கள் ரபாலிலிருந்து வந்த 100 எதிரி விமானங்களே வழிமறித்தன. ஹாலந்தியாவிலிருந்து டச்சு நியூ கினியாவின் கோடிக்கு நேசதேசத்தார்கள் வருவதற்குச் சௌகரியம் அளித்த ஸான் ஸ்டீபார் முனேயில் நேசதேசப் படைகள் இறங்கியதற்குமுன் நேசதேச விமானிகள் அதற்குச் சமீபத்திலிருந்து புறப்பட்ட பயிற்சிபெற்ற சண்டை விமானிகளே சந்தித்ததாகச் சொன்னுர்கள். ஆனுல் அந்த விமானிகள் சான்சபார் கப்பல் கூட்டத்தை தாக்கவில்லே. நாம் கடற்கரை ஓரமாக முன்னேறியதெல்லாம் எதிரிகள் உபயோகிக்கக்கூடிய தளங்களின் வட்டாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் தான். உலகத்தை ஜெயிக்க வெகு காலமாக ஆயத்தம் செய்துவந்த ஜப்பான் போர்தொடுக்காமல் இவ்விதம் ஒதுங்கி நிற்க, காரணம் யாது? ஜப்பானுக்கு விமான பலக்குறைவென்பது இல்லே. ஏனெனில் இரண்டரை வருடங்களாக தென்மேற்கிலும், தெற்கு பஸிபிக்கிலும் ஜப்பானுக்கு ஏற்பட்ட நஷ்டங்களே ஜப்பான் ஈடுசெய்ய உற்பத்தி சக்தி பெற்றிருக்கிறது. அதற்கு விமான தளங்களும் குறைவாக இல்லே. ஜப்பானியப் போரின் உச்ச நிலேயில் அதற்கு தீவு தீவாக தளங்கள் இருந்தன. எண்ணெய்க் குறைவும் அதற்கு இல்லே. ஏனெனில் கிழக்கு இந்தியத் தீவுகளில் உள்ள எண்ணெய்க் கிணறுகள் இன்றும் ஜப்பான் வசம் இருந்து வருகின்றன. அவைகளிலிருந்து ஜப்பானிக்குச் செல்லும் கடல் மார்க்கங்களும் துணிக்கப்படவில்லே.

இதற்கு வேறு காரணங்கள்தான் இருக்கவேண்டும். சென்ற வருஷத்தில் பின்ஷேபனில் ஜப்பானியர் தோல்வியுற்று நியூகினியாவில் ஹுவான் பகுதியை இழந்தபின் அது யுத்த தந்திரத்தை மாற்றிவிட்டதுபோல் தோன்றுகிறது. அப்பொழுது ஜப்பான விமான ஆதிக்கத்தை இழந்தது. நாமும் ரபாலுக்குச் சமீபத்தில் தளத்தை ஏற்படுத்தி விட்டோம். அதனுல் ஜப்பான் நியூகினியாவில் உள்ள படைகளேக் கைவிட்டுவிட்டது. விமானப்படையை வேறு இடத்திற்குக் கொண்டுபோய் விட்டது.

வீவாக், ஹாலண்டியாவை நாம் பலமாகத் தாக்கி தரையிலிருந்த நூற்றுக்கணக்கான விமானங்களை அழித்தபின் ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குப் பின்வாங்கி விட்டார்கள்.

இந்தத் தீவுக்கூட்டத்தில் உள்ள அநேக விமான தளங்களிலிருந்து ஜப்பானியர்கள் விமானந் தாங்கிகளில் வரும் நமது விமானங்களை எதிர்த்துப் போராட உத்தேசிக்கிறார்கள். பஸிபிக் போரில் முடிவான கடல் யுத்தத்தை நடத்த நமது படைகளுடன் விமானந்தாங்கிகள் வந்தே தீரும் என்று ஜப்பான் அறிந்துவிட்டது.

காலக்கிரமத்தில் ஜப்பானின் பலஹீனம் பலமானதென்றும், நியூகினியாப்போரில் நடைபெற்றதுபோலவே மறுபடியும் சம்பவிக்குமென்றும் நாம் அறிந்து கொள்ளலாம். இதனால் இவ்வித நம்பிக்கையுடன் இருப்பதும் எதிரியின் சக்தியையும் தந்திரத்தையும் குறைத்து மதிப்பதும் சாவதானமல்ல. சரியான காலத்தில் ஜப்பானின் விமான கடற்படை பலத்தை உபயோகித்து மகத்தான தாக்குதல் செய்ய ஜப்பான் முற்படும் என் பதை நாம் எதிர்பார்க்க வேண்டும்.

பசிபிக்கில் நாம் ஒவ்வொரு தீவாகத் தாண்டிச் செல்வதால் நாம் சுற்றி வளைத்துச் சென்ற ஜப்பானியப் படைகள் நேசதேசக் கடற்படை விமானப் படையின் தாக்குதலைக் கண்டு வியப்புறுகின்றன. ரபாலைச் சுற்றிலும் நியூ பிரிடனின் வடக்குக் கோடியிலும், நியூ அயர்லாந்தில் காவியங்கிலும், போகென்வில்லியிலும், ஸாலமன்ஸ் தீவின் பல பாகங்களிலும் ஜப்பானிய ஆக்கிரமிப்புப் படைகளின் பாக்கிகள் ஏராளமாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான அப்படைகளைத் துடைத்த பின்தான் அவ்விடங்களில் பொதுஜன வாழ்க்கை மறுபடியும் நிலை நாட்டப்படும். அதேவிதமாக நியூகினியாவில் வீவாக்குக்குச் சமீபத்திலுள்ள ஆஸ்திரேலியாவுக்கும் ஐடாபீக்கு வடமேற்கில் உள்ள அமெரிக்கர்களுக்கும் மத்தியில் அகப்பட்டுக் கொண்ட 40,000 ஜப்பானிய ஸோல்ஜர்களில் எஞ்சியவர்களும் அழிக்கப்படவேண்டும். அவைகளில் பாதிபாகம் கொல்லப்பட்டுவிட்டார்கள் அல்லது நோய்வாய்ப்பட்டு இறந்தார்கள்.

விமானப்படையில் அதிகவேகம் பொருந்தியது.

பிரிடனின் புதிய ஸ்பிட்பையர் 14.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

பிரிடிஷ் விமானப் படையில் புதிய ஸ்பிட்பையர் விமானம் கட்டப்பட்டிருக்கிறது. இது மற்ற விமானங்களைவிட அதிகவேகம் பொருந்தியது. அதிக உயரம் சென்று அடிக்கக் கூடியது. எதிரிகளின் விமானங்கள் இவ்வளவு உயரம் பறந்து செல்லமுடியாது.

இந்தப் புதிய விமானங்கள் 300 பறக்கும் வெடிகுண்டுகளை அழித்திருக்கின்றன.

இதில் சில புதிய அம்சங்கள் காணப்படுகின்றன. அதில் ஐந்து கவைகளுள்ள புரொபெல்லர் இருக்கிறது. மிகவும் லாகவத்துடன் பறந்துசெல்ல இது வசதியளிக்கிறது. அதன் முகம் நீண்டிருக்கிறது. இதற்குப் பெரிய சக்கரங்களிருக்கின்றன.

இந்த விமானத்தில் சென்ற விமானிகள் 40,000 அடி உயரத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இந்த ஏழு மைல் உயரத்திலும் அதன் சலன சக்தியும் அதை அடக்கும் சக்தியும் குன்றிவிடவில்லை.

இந்த விமானத்தில் கிரிப்பான் 65 எஞ்சின் பூட்டப்பட்டிருக்கிறது. அதற்கு 2,000 குதிரைவேக சக்தியுண்டு. அது முக்கியமாக வெகு உயரம் சென்று எதிரியை விழிமறிக்கும்.

D தினத்திற்குமுன் இந்த விமானங்கள் ஜெர்மன் உயரப்பறக்கும் வேவு பார்க்கும் விமானங்களைத்தாக்க ஏவப்பட்டன. அவைகள் 1,000 மணிகள் நேரம் ரோந்துசெய்தும் எதிரி விமானம் ஒன்றுகூட புலப்படவில்லை.

அடைப்பானைத் திறந்த மாத்திரத்தில் இந்த விமானம் தரையிலிருந்து கிளம்பி உயரச் செல்லும். அதில் ஒரு தோஷமும் கிடையாதென்று விங் கமாண்டர் R. W. ஆக்ஸ்ஸ்பிரிங்ஸ் சொல்லுகிறார்.

இதன் தாக்கும் சக்தியை இங்குகூறுவோம். ஒரு விமானி தகவல்கொண்டுபோகும் மோட்டார் சைகிளையும் அதன் ஓட்டியையும் வெடிகுண்டால் தாக்கினர். சைகிளிலும் ஓட்டியும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன.

தூரம் கண்டுபிடிக்கும் கருவி கண்டுபிடிக்கப்பட்டது.

பறக்கும் வெடிகுண்டுகளுக்கு பிரிட்டனின் எதிர்ப்பு.

உற்பத்தி மந்திரியின், கௌரவ ரஸாயன அட்வைஸர் ஸர். தாமஸ் மொட்டானல் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஷில்லிங்கு மேற்படாத செலவுடைய தூரம் கண்டுபிடிக்கும் கருவியானது, பறக்கும் வெடிகுண்டுகளால் கஷ்டப்பட்ட விமானிகளுக்கு சரியான உதவியாய் இருந்தது.

'ஹெரிபோர்டின் அருகிலுள்ள அவரது வீடான வின்போர்டன் வீட்டில் 24 மணி நேரங்களுக்குப்பின் இத்தன்மைய ஒன்றை அவர் கண்டுபிடித்ததை உணர்ந்தார். ஒரு வாரத்திற்குள்ளாக இக்கருவி நூற்றுக்கணக்கில் செய்யப்பட்டன.

''இத்தூரம் கண்டுபிடிக்கும் கருவி, இந்த யுத்தத்தில் அவ்வளவு தேவையுள்ளதில்லை எனினும் அது ஒரு ரகசிய ஆயுதமாகவே வைத்துக்கொள்ளவேண்டும்'' என்று ஸர். தாமஸ் சொல்லுகிறார்.

"ஆனாலும், இது ஒரு சிறிய காரியம். நெருப்புப்பெட்டியிலும் கனம்குறைவானது. பின்பு இது சுலபம் என்று கருதப்படுவதும் ஆனது'' என்றும் அவர் கூறுகிறார்.

ஜப்பானின் பிரதிநிதி சபையைப் பற்றி நிடொப்பின் அபிப்பிராயம்.

(தூரக்கிழக்கு பத்திரிகை).

ஜப்பானின் தாராளக் கக்ஷியைச் சேர்ந்தவரும், சர்வதேச சங்கத்தின் உதவி காரியதரிசி ஜெனரலாக ஏழு வருடங்கள் வேலை பார்த்தவரும், இப்பொழுது காலஞ்சென்றவருமான டாக்டர் நிடொபி ஜப்பானிய பிரதிநிதி சபையையும், ஜப்பானின் ராஜீய நடவடிக்கைகளையும் பகிரங்கப்படுத்துவதுண்டு. ஜப்பானியப் பத்திரிகையான மெயினிஷியன் பத்திரிகாசிரியருக்குப் பேட்டியளித்தபொழுது அவர் பின்வருமாறு சொன்னார்:—

"இருபது வருடங்களுக்குமுன் துஷ்ட ஸ்வபாவமுள்ள எனது சித்தம் ஹாஸ்ய ரசமுள்ள கொக்கி-கொகோ என்ற புத்தகத்தை எழுதும்படி தூண்டிற்று. டம்பமாகப் பேசக்கூடியதும், காரியாம்சையில் ஒன்றும் செய்யாததும், நிர்வாக முறைகள் பரிகசிக்கக்கூடியதாகவும், பொய்யாகவுமிருந்ததுமான ஒரு நாட்டைப்பற்றியும், அதன் நிர்வாகத்தைப்பற்றியும் அதில் நான் எழுதினேன். இதற்கு உதாரணமாகச் சொல்லக்கூடிய ஒரு நிர்வாகம் 1931-ம் வருஷத்தில் நிலைபெற்றிருந்தது. நமக்கு வெகு சமீபத்தில் நிர்வாக சபை அமைப்பிலும் பெரிய ராஜீயக்கக்ஷி என்று சொல்லக்கூடிய அமைப்பின் நடவடிக்கையிலும் அதற்குத் தலைவராகயிருந்த கல் நெஞ்சம் படைத்த பிரபுவின் நடவடிக்கையிலும் என்னுடைய அபிப்பிராயங்கள் பிரதிபலித்தன. இந்த நாட்டில் ராஜீயவாதிகள் மிகவும் குறைவாக முன்னேற்றமடைந்தவர்கள். அவர்கள்தான் நிர்வாகத்தின் போக்கைத் தடைப்படுத்துகிறார்கள். தேசத்தின் மனப்பான்மையைக் கெடுத்துவிடுகிறார்கள். பிரதிநிதி சபைக்கூட்டமென்றால் 6 ராஜீயவாதிகளும், 20 பலசாலிகளும், 400 பொம்மைகளும் கூடுகிறார்களென்று பொருள்படும்.

தேசீய சேமிப்புப் பத்திரங்கள்.

நல்ல வட்டி : பொருளும் பத்திரம்.

விவரம்.—ரூ 10, ரூ 50, ரூ 100, ரூ 500, ரூ 1,000 எல்லா போஸ்டாபீஸுகளிலும் கிடைக்கும்.

12 வருஷத்தில் பூர்த்தியாகும். நடுவில் வேண்டுமானால் மூன்று வருஷத்துக்குப்பின் கூடிய தொகையை பெற்றுக்கொள்ளலாம்.

வட்டி:—4⅙ சத விகிதம். வருமானவரி (இன்கம்டாக்ஸ்) கிடையாது. ரூ 10 12-வருஷத்தில் ரூ 15 ஆகிறது.

தேசீய சேமிப்பு பத்திரங்களின் மூலம் நீங்களும் சேமித்து இந்தியாவிற்கும் நல்ல செல்வமளிக்கிறீர்கள்.

எதிர்காலத்தின் க்ஷேமத்தை இன்றே கோருங்கள்.

தேசீய சேமிப்புப் பத்திரங்களை உடனே வாங்குங்கள்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 217. (3-வது பிரிவு).

30- 9-44	முனிஸிபல் ஆபீஸ்	...	மாலை	6.00
1-10-44	சூரக்காடு	...	,,	7.00
,,	கோட்டைக்காடு	...	,,	7.30
2-10-44	தென்னதிரயன்பட்டி	...	,,	7.00
,,	விசலூர்	...	,,	7.30
3-10-44	மழையூர்	...	,,	7.00
,,	கரம்பக்குடி	...	,,	7.30
4-10-44	ராமச்சந்திரபுரம்	...	மாலை	7.00
,,	ராயவரம்	...	,,	7.30
5-10-44	வாளரமாணிக்கம்	...	,,	7.00
,,	எம்பல்	...	,,	7.30
6-10-44	விராலிமலை	...	,,	7.00
,,	பொருவாய்	...	,,	7.30

பிரஸங்கம் 218. (4-வது பிரிவு).

7-10-44	முனிஸிபல் ஆபீஸ்	...	மாலை	6.00
8-10-44	நீர்ப்பழனி	...	,,	7.00
,,	ஆலூர்	...	,,	7.30
9-10-44	புத்தாம்பூர்	...	,,	7.00
,,	வைத்திக்கோவில்	...	,,	7.30
10-10-44	நார்த்தாமலை	...	,,	7.00
,,	உப்பிலியக்குடி	...	,,	7.30
11-10-44	வடவாளம்	...	மாலை	7.00
,,	சம்மட்டிவிடுதி	...	,,	7.30
12-10-44	அண்டக்குளம்	...	,,	7.00
,,	கிள்ளனூர்	...	,,	7.30
13-10-44	கொடும்பாளூர்	...	,,	7.00
,,	விராலூர்	...	,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

30— 9—44	பொன்னமராவதி.
1—10—44	விராச்சிலை.
3—10—44	பேராம்பூர்.
5—10—44	குழிபிறை.
6—10—44	புதுக்கோட்டை.
7—10—44	திருமெய்யம்.
8—10—44	தீத்தான்விடுதி.
10—10—44	வடகாடு.
12—10—44	கீழாநிலை.
13—10—44	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—6-10-44.